நாவாந்துறைப் படிப்பகம்


# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சுடர்: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 01 வியாழக்கிழமை (17 - 08 - 2000) VALAMPURI ஒலி: 241


★ வவுனியா நகரசபை வாசலில்

## தற்கொலைக் குண்டுத் தாக்குதல் 9வயது சிறுமி பலி; மூவர் காயம்!

(வவுனியா அலுவலக நிருபர்)

வவுனியாவில் நேற்று மாலை இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் ஒன்பது வயது சிறுமி ஒருவர் பலியானார் ஒரு பொதுமகன் உட்பட இரண்டு படையினரும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இரு படையினரும் வன்னி இராணுவ வைத்தியசாலையிலும் பொதுமகன் வவுனியா அரசினர் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

[8 ஆம் பக்கம் பார்க்க]

## முல்லை, குண்டுவீச்சில் அரசின் புதிய குண்டுவீச்சு விமானம்!

[வவுனியா]

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அம்பலவன் பொக்கணை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அரசு கொள்வனவு செய்த புதிய விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி வகுப்பறைக் கொட்டில்கள் மூன்று முற்றாக எரிந்து நாசமாகியதுடன் தளபாடங்களும் பலத்த சேதத்துக்குள்ளனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிபிர் குண்டு வீச்சுவிமானங்கள் ஆறு குண்டுகளை வீசி இத்தக்குதலில் ஈடுபட்டதாகவும் அந்நேரம் அங்கிருந்த மாணவர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றமையால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப் படுகிறது. (வ)

### விமானத் தாக்குதல்

வடமராட்சி கிழக்கு நாகர் கோவிலை அண்டிய பகுதியில் நேற்றுக் காலை முதல் நண்பகல்வரை கிபிர் விமானங்கள் பலத்த குண்டுத்

(8 ஆம் பக்கம் பார்க்க

★ குறைநிரப்பு பிரேரணை மூலம்

# நாட்டின் பாதுகாப்பிற்கு மேலும் 112கோடிரூபாவுக்கு அங்கீகாரம்!

### பாராளுமன்றம் வழங்கியது

(கொழும்பு அலுவலக நிருபர்)

நாட்டின் பாதுகாப்பிற்கு வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை விட குறை நிரப்புப் பிரேரணை மூலம் மேலும் 112 கோடி ரூபா பாதுகாப்பு செலவினத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது

பாராளுமன்றத்தில் அமைச்சர் ஜி- எல் பீரிஸினால் சமர்பிக்கப்பட்ட பல்வேறு நிதிஒதுக்கீட்டு பிரேரணைகளின் குறை நிரப்பு பிரேரணையாக அதிகரித்த பாதுகாப்புச் செலவீனத்திற்தும் ஏனைய செலவீனத்துக்குமான குறைநிரப்பு பிரேரணைகளாக 378கோடி ரூபா ஒதுக்கீட்டுக்கும் பாராளுமன்றம் அங்கீகாரம அளித்துள்ளதாக நீதி அரசியல் விவகார அமைச்சரும், நீதி அமைச்சருமான ஜி எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சு, நீதி அமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் சம்பந்தமான குறை நிரப்பு ஒதுக்கீட்டு சட்டமூலம்நேற்று நீதி அரசியல் விவகார அமைச்சர் ஜி.எல் பீரிசினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது;

இதில் 112 கோடி ரூபா பாதுகாப்பு செலவீனத்திற்கு குறைநிரப்புப் பிரேரணை மூலம் அனுமதிக்கப்பட்டு பாராளுமன்ற அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

நிதி ஒதுக்கீடு மசோதாவை பாராளுமன்றில் சமர்ப்பித்து வைத்துப் பேசிய அமைச்சர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இதுதான் பா.மன்ற ஜனநாயகமா? பாராளுமன்றத்தில் சபாநாயகர் கேள்வி

(கொழும்பு)

நேர்மையான கௌரவமான அரசியல் வாதிகளை இலங்கையில் காண்பது மிகவும் அரிதாக உள்ளது அண்மைக்காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் நடந்து கொண்ட முறையை பார்த்

(8ம் பக்கம் பார்க்க)

### பயணிகள் கப்பல் இன்று நடைபெறும

(யாழ்ப்பாணம்)

'ஈ' இலக்கமுடைய பயணிகளுக்கான கப்பல் சேவை இன்றுநடைபெறுமென யாழ். சிவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

பயண அனுமதிப்பத்திரமும், பயணச் சீட்டும் பெற்றவர்களை இன்று காலை 8 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

## 'வலம்புரி'யின்செய்திக்கு மாவை சேனாதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 15ஆம்திகதி 'வலம்புரி' யில் வெளியிடப்பட்ட 'கூட்டணி வேட்பாளர் பட்டியல் தயார் நிலையில்' என்ற செய்தி தவறானதும் விபரீதமானதெனவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை

(8 ஆம் பக்கம் பார்க்க

## மாவை சேனாதி மறுப்புக்கு 'வலம்புரி'யின் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 15ஆம்திகதி 'வலம்புரி'யின் முதற்பக்கத்தில் வெளியிடப்பட்ட ''யாழ். மாவட்ட கூட்டணி வேட்பாளர் பட்டியல் தயார் நிலையில்'' என்ற செய்திக்கு மாவை சேனாதிராஜா மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வெளியிடப்பட்ட சேனாதியின் மறுப்பையும் அதற்கான விளக்கத்தையும் பிரசுரிப்பது பத்திரிகை தர்மம் அவ்வகையில் கூட்

(8ஆம்பக்கம் பார்க்க)


உள்ளே!
விஞ்ஞானம்
மாதிரி
வினாத்தாள்
பகுதி– 1


## கூட்டுறவு ஆணையாளர் கூட்டுறவாளர்களை சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாண அபிவிருத்தி ஆணையாளர் எஸ். சுப்பிரமணியசர்மா இன்றுகாலை யாழ். மாவட்ட கூட்டுறவாளர்களை சந்திக்கவுள்ளார்.

யாழ். வீரசிங்க மண்டபத்தில் இன்றுகாலை 11மணிக்கு நடைபெறவிருக்கும் இச்சந்திப்பில் சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டாம் படிச் சங்கங்கள் மாவட்டமட்ட கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர்கள் பொதுமுகாமையாளர்களை கலந்துகொள்ளுமாறு யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கு. சண்முகநாதன் கேட்டுள்ளார். (வ)

## அரசுக்கு ஆதரவு தெரிவித்து நாளை மாபெரும் ஆர்ப்பாட்டப்பேரணி

(கொழும்பு)

அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகளுக்கு ஆதரவு தெரிவித்தும், அரசியல் அமைப்பு சீர்திருத்தத்திற்கு ஆதரவு தெரிவித்தும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், நாளை வெள்ளிக்கிழமை கொழும்பில் பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற உள்ளது.

இவ்வார்ப்பாட்ட ஊர்வலத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் அங்கம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் படையினரின் சூட்டிற்கு இருவர் பலி

மட்டக்களப்பு தாந்தாமலையில் நேற்று முன்தினம் காவல் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு அப்பாவிப் பொது மக்கள் உயிரிழந்தனர்.

சதாசிவம் விஜயசுந்தரம் (வயது 45), எஸ். நிலாந்தன் (வயது 25) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்,

இதே வேளை கடந்த மாதம் 10 ஆம் திகதியும்இதே இடத்தில் கிராம உத்தியோகத்தர் உட்பட இருவர் சுட்டுக் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ந-108)

## பூந்தோட்ட நலன்புரி மக்களுக்கு ஜூன்மாதக் கொடுப்பனவு வழங்கப்பட்டது

(வவுனியா)

பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு ஜூன்மாதத்திற்குரிய அரசின் நிவாரணக் கொடுப்பனவுகள் யாவும் வழங்கப்பட்டுள்ளதாக வவுனியா திட்டப்பணிப் பாளர் திருமதிவிஜயலெட்சுமி சேதீஸ்வரன தெரிவித்தார்.

இம்மாதம் 19 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னதாக பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் வசிப்பவர்களுக்கு ஜூலை மாத நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் திட்டப்பணிப்பாளர் மேலும் கூறினார். (வ)

# ஒழுக்க மீறல்களே மனிதஅவலத்திற்கு காரணம்

## இதிகாசங்கள் வற்புறுத்துவதும் இதுவே

இன்று எம் மத்தியில் நிலவும் ஓயாத போர்களுக்கும், தீராத போட்டிகளுக்கும் கொலைகளுக்கும், கொள்ளைகளுக்கும், தவறான நடத்தைகளுக்கும், பஞ்சத்திற்கும் பட்டினிச் சாவுகளுக்கும் அடிப்படைக் காரணியாக விளங்குவது எமது ஒழுக்கமின்மையே

சமூகக் கட்டுப்பாட்டுச் சக்தியாகவும், எமது நடத்தையினை நெறிப்படுத்துவதாகவும் ஒழுக்கத்தினை உயர்வாக உயிரினும் மேலாகப் போற்றி நெறி முறைப்பட்ட சீரிய வாழ்வினை வாழாது. எமது அறிவையும் ஆற்றல்களையும், வளங்களையும் விஞ்ஞானத் தொழில் நுட்பவிருத்தியினையும் தவறாகப் பயன்படுத்தி வாழநினைப்பதாலும் முனைவதாலேயுமே இத்தகைய அனர்த்தங்களையும், அதனால் வரும் துன்பங்களையும், இழப்புக்களையும் அனுபவிப்பவர்களாக விளங்குகின்றோம், இதனால் அரிதான இந்த மானிடப் பிறப்பையும், எமது சிந்தித்துச் செயலாற்றும் திறனையும் அர்த்தமற்றதாக ஆக்கிவிடுவதுடன், அழிவுப் பாதையில் செல்பவர்களாகவும் திகழ்கின்றோம்.

### ஒழுக்க வாழ்வு

இத்தகையதோர் இழி நிலை எம்மை விட்டு அகல வேண்டுமெனில், எம்முன்னோர் கைக் கொண்ட ஒழுக்க வாழ்வை நாம் கைக்கொள்ள வேண்டும்.

தமிழ் இலக்கியங்கள், சமய அறநூல்கள், ஆன்றோர் வாக்குகள், எம் மூத்தோர் வாழ்க்கைப் போக்குகள் போன்றவற்றை ஏற்ற வழி காட்டியாகக் கொண்டு ஒழுக்கங்காத்துஉயர முனைய வேண்டியது அவசியமானதாகும்.

### இதிகாசங்களில் ஒழுக்கம்

அன்று ஒழுக்கத்தைச் சிதற விட்டதால் பெரும் போராற்றல் மிக்க, இராவணனும், துரியோதனனும் முடியிழந்து மானமிழந்து. திராப்பழி சுமந்து நின்றமையையும், வாய்மை எனும் ஒழுக்கத்தைக் காப்பதற்காக தசரதன் உயிர் விட்டமையையும் தருமம் பொறுமை என்பவற்றிற்கு இலக்கணமாக விளங்கிய தருமன் உலகம் போற்றும் உத்தமனாக விளங்கியமையையும் கற்பெனும் ஒழுக்கத்தைக் கண்ணெனப் போற்றிக் காத்தமையால், திரௌபதி, கண்ணகி, அருந்ததி, சகுந்தலை முதலிய பெண்கள் கற்புக்கரசிகளாக போற்றப் படுகின்றதன்மையும் நன்குணர்ந்து மனத்திருத்தி, காமம், கோபம், விரோதம், குரோதம், சுயநலம் போன்ற இன்னோர் கொடுங் குணங்களை நீக்கி மனந்திருந்திச் செய்யத் தகாதவற்றைச் செய்ய அஞ்சியும், செய்யத் தக்கவற்றைச் அஞ்சாது செய்யும் நம்பிக்கைக்குரியவராகவும், பிறரிடத்தில் பற்றுடையவராகவும், பிறர் நலம் பேணுபவராகவும், நேர்மையுள்ளவராகவும் திகழ்ந்து ஒழுக்க சீலராகி, மனித நேயத்திலும் அதனிலும் மேலாக ஆன்ம நேயத்திலும் சிறந்தவராகி வாழ்வின் நலமத்தனையும் ஒருங்கே பெற்று வழி காட்டி மக்களனைவரும் விரும்பும் மகாத்மாவாகி சிறப்பெய்துவோமாக.

மனோகரி ஜெகதீஸ்வரன்


### சின்னஞ்சிறு விளம்பரம்

ரி. வி. தேவை

மினி சினிமாவுக்குப் பொருத்தமான அகலத் திரையுள்ள ரி.வி நல்ல விலைக்கு வாங்கப்படும் ரெலிபங்கன், குறுண்டிக், புளோபங் ரகங்கள் விரும்பத்தக்கவை தபால் மூலமும் தொடர்பு கொளளலாம்.

திரு.சு. இரத்தினம் மே/பா திருமதி. கே. புனிதவதி ஸ்ரேசன் வீதி, (புகையிரதக் கடவைக்கு அண்மையில்) கோண்டாவில் (கி-721)


## சிறுவன் ஆஸ்பத்திரியில் அனுமதி

(மல்லாகம்)

பூவரசு மரத்திலிருந்து அண்மையில் கால் தடக்கி வீழ்ந்ததில் சிறுவன் ஒருவன் கைமுறிவடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோ. ஜெனிஸ்ரன் (வயது 07) என்னும் சிறுவனே கை முறிந்து காயமுற்றவர் ஆனார். (த - 14)

## பிரிட்டன்...

[7ஆம் பக்க தொடர்ச்சி]

பெருகியுள்ளன. மேலை நாடுகளில் பெண்கள், பிள்ளைகளின் முறைப்பாடுகளுக்கு அவ் அரசாங்கங்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்பதனால் பெற்றோர் பிள்ளைகளைத் தண்டிக்க முடிவதில்லை பிள்ளைகள் தொலைபேசி மூலம் முறையிட்டு விடுகின்றன.

### மனச்சோர்வு

சிறுவர்களுக்கும் அறுபது வயதைத் தாண்டிய முதியவர்களுக்கும் ஒரு தொகைப் பணம் கொடுக்கிறார்கள். முதியோருக்குப் பிரயாணம் வைத்தியம் ஆகியவற்றுக்கான செலவுகள் யாவும் இலவசம். நம் நாட்டின் புகழ் பூத்த அதிபர்கள் ஆசிரியர்கள் பலர் அங்குள்ள நேர்சிங் ஹோம்களில்தங்கியுள்ளனர்.

[வயோதிபர் இல்லங்களை நேர்சிங்ஹோம் என்று தான் அழைப்பார்கள்].

அவர்கள் சொந்த வீடு, நாடு பற்றிய ஏக்கத்துடன் சதா உழன்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நிலை பரிதாபமானது. பேரப்பிள்ளைகள் இவர்களுடன் கதைப்பதில்லை. அவர்கள் புது வகையான கலாசாரத்திலுள் ஆழ்ந்து கொண்டிருக்கிறார்கள்:

மேலை நாடுகளில் உள்ள இளைஞர்கள் குடும்ப வாழ்வில் ஏக்கத்துடனும் எதிர்காலம் பற்றிய கவலையுடனும் உள்ளனர். தாமும் கனேடிய, பிரிட்டிஷ் பிரஜைகளாக மாறுவதில் ஆர்வம் கொண்டுள்ளனர். அவர்களும் தாய் நாடுமீள்வதில் ஆர்வம் காட்டவில்லை.

எது எவ்வாறாயினும்இனப் பற்றுடனும், ஈழத்தமிழர் பற்றிய ஏக்கத்துடனும் அவதானத்துடனும் செயற்படும் இளைஞர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இன்ரநெற், தொலைக்காட்சி மூலமாக 24 மணிநேரமும் உடனடியாக ஈழத் தமிழர்களின் உணர்வலைகளை அறிய முடிகிறது:

ஒட்டுமொத்தமாக நோக்கின் பலஆற்றலுள்ள இளைய தலைமுறையை எமது நாடு இழந்துள்ளது. சுபீட்சமான சமாதானமான நாடு மீண்டும் இங்கு மலர்ந்தால் அங்கு போய் சீரழியும் எமது சமூகம் நாடு திரும்ப வழிவகுக்கும். (எ)

## இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தினர், தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்துள்ள - எதிர்வரும் க. பொ. சா/த பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவருக்கு இலவசக் கருத்தரங்குகளை பாடரீதியாக நடத்தவுள்ளனர்.

இடம் பெயர்ந்து கஷ்டப்படும் மாணவர்களின் கல்வி வசதி கருதி இவ்வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன. இவ் வகுப்புகளில் கலந்துகொள்ள விரும்பும் தென்மராட்சிப் பிரிவு க. பொ. த (சா/த) மாணவர்கள் தமது பெயர்களை இம் மாதம் 17 ம், 18 ம் திகதிகளில் மருதனார்மடத்திலும் நெல்லியடி ம. ம. வித்தியாலயத்திலும் தமதுபெயர்களைப்பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது: (க).

## 'உ' அட்டைக்கு 3கிலோ சீனி வழங்கல்

[இணுவில்]

தென்மராட்சி மேற்கு கைதடி பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிளையில் ''உ'' அட்டைக்கு 3 கிலோ சீனி விநியோகிக்கப்படுகிறது அத்துடன் ஆவணிமாத நிவாரண கொடுப்பனவுகளும் இன்று வியாழன்முதல் வழங்கப்படவுள்ளது.

இந்நிவாரணக் கொடுப்பனவுக்கான மீளாய்வுப்பட்டியல் கோப்பாய், நல்லூர் பிரதேச செயலகங்களினால் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு கூட்டுறவுச் சங்க கிளைகளில் ஒவ்வொரு மாதமும் 2 வது வாரத்தில் நிவாரணக் கொடுப்பனவுகள் மேற்கொள்ள வேண்டும் என அரசாங்க அதிபர் பணிப்புரை விடுத்ததும் குறிப்பிடத்தக்கது: (த-49)

## நல்லூரில் கிணறுகள் சுத்திகரிப்பு

(கந்தர்மடம்)

நல்லைக் கந்தன் உச்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாண இந்துக்கல்லூரிச் சாரணர்கள் கோயிலின் சுற்றுப் பிரதேசத்தில் உள்ள கிணறுகளை சுத்தமாக்குகின்றனர்.

இதன் முதற்கட்டமாக அரசடி வீதி, கோயில் வீதி, பருத்தித்துறைவீதிகளிலுள்ள கிணறுகளைப் பார்வையிட்டு குளோரின் இட்டு வருகின்றனர். (த-37)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

[யாழ்ப்பாணம்]

நீச்சல் பயிற்சியின் போது கடந்த 15 ம் திகதி நீரில் மூழ்கி தமது தரப்பில்நான்கு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடற்கரும்புலி மேஜர் இசையரசி செல்லச்சாமி செல்வம் யாழ்ப்பாணம் லெப்டினன் கேணல் பழனிராஜ்/பழனிதங்கமுத்துசிவநாதன் புதுக்குடியிருப்பு, மேஜர் கதிரிலி சரண்யா சின்னத்தம்பி வதனா யாழ்ப்பாணம், லெப்டினண்ட் தூயவள் சங்கரப்பிள்ளை விஜயலட்சுமி கிளிநொச்சி ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தவர்கள் ஆவர். (செ)

## ஐ. தே.க. வின் முன்னாள் ஆலோசகர் கைதானார்

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் ஆலோசகரும் முக்கிய பிரமுகருமான ஒருவர் கொழும்பில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் 1980 களில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போது 4 பேரை கொலை செய்வதற்கு உடந்தையாக இருந்தார் என்று காரணங் காட்டிக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் உயர் அதிகாரி இவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டமையை அடுத்தே பிரஸ்தாப நபர் கைது செய்யப்பட்டார். (க-து)

## தீர்மானம் நிறைவேற்றல்

யாழ்ப்பாணம் தட்டா தெருச்சந்திகலாஜோதிஇளைஞர் ஒன்றிய புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

நிர்வாகிகள் தெரிவின் போது. நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவத்தையொட்டி அரசடிவீதியில் தண்ணீர்ப் பந்தல் அமைப்பது,

நல்லூர் உற்சவத்தையொட்டி வழமைபோன்று இவ்வருடமும் சமய அறிவுப் போட்டி நடாத்துவது,

கலாஜோதி இளைஞர் ஒன்றிய கட்டடத்தினை படையினரிடமிருந்து மீளப்பெற நடவடிக்கை எடுப்பது மீளப் பெறும் மேற்படி கட்டடத்தின் திருத்தவேலைகளை உடனடியாகவே மேற்கொள்வது, வரும் மாதம் முதல் கலஜோதிஇளைஞர் ஒன்றிய வாசிகசாலையினை இயங்க வைப்பது ஆகிய 5 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

ஆகஸ்ட் மாதம் 16-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தரப்படுகின்றது:

சாவகச்சேரி

| | |
|---|---|
| 150432 ஏ | 150432 பி |
| 150432 சி | 150432 டி |
| 150432 ஈ | 150475 ஏ |
| 150475 பி | 150475 சி |
| 151843 ஏ | 152074 ஏ |
| 152191 ஏ | 152191 பி |

நல்லூர்

| | |
|---|---|
| 151952 ஏ | 151952 பி |
| 151952 சி | 151952 டி |
| 151961 ஏ | 152061 ஏ |
| 152061 பி | 152095 ஏ |
| 152095 பி | 152095 சி |
| 152129 ஏ | 152129 பி |
| 153431 ஏ | 153431 பி |
| 152032 ஏ | |

சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 141966 ஏ | 141966 பி |
| 144047 ஏ | 144047 பி |
| 144047 சி | 144047 டி |
| 150604 ஏ | 150653 ஏ |
| 155204 ஏ | 152054 ஏ |
| 152055 ஏ | 152055 பி |
| 152157 ஏ | |

தெல்லிப்பழை

| | |
|---|---|
| 150673 ஏ | 151769 ஏ |
| 151769 பி | 151784 பி |
| 151802 ஏ | 151921 ஏ |
| 151921 பி | |

உடுவில்

| | |
|---|---|
| 143961 ஏ | 150643 பி |
| 150643 பி | 152073 ஏ |
| 152103 ஏ | 152103 ஏ |
| 155107 ஏ | 155178 ஏ |
| 155178 பி | 155178 சி |

## திருடமுற்பட்டவர் பொலிசாரிடம்ஒப்படைப்பு

### ஈச்சமோட்டையில் சம்பவம்

(சுண்டுக்குளி)

பட்டப்பகலில் யாருமற்ற வீட்டில் திருட முனைந்த நபர்களை மடக்கிப் பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் ஈச்சமோட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஈச்சமோட்டை பீச் றோட்டில் வீட்டு உரிமையாளர் இல்லாத நேரம் பார்த்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த தளபாடப் பொருட்களைக் காரில் ஏற்றிச் சென்றுவிட்டனர்.

சிறிது நேரம் கழித்து அவ்விடம் மீண்டும் வந்த திருட்டுக்குழு வீட்டுக் கதவு. யன்னல் என்பவற்றை காரில் ஏற்ற முற்பட்ட சமயம் அயலவர்களால்இனங்காணப்பட்டு படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தற்போது விசாரணைகளின் பொருட்டு அவர்கள் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்- (உ)


## அறிவித்தல்

### கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருடனான சந்திப்பு

வடக்குக் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அவர்கள் யாழ்.மாவட்டத்திற்குவருகை தந்துள்ளதால் சகல ப.நோ.கூ. சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், இரண்டாம்படிச் சமாசங்கள், மாவட்ட மட்ட கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர், பொது முகாமையாளர்களுடனான கலந்துரையாடலுக்கு [17.08.2000] இன்று வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்,

கூ. அ. உ. ஆணையாளர்
யாழ். மாவட்டம் (கி722)

## திருடர் கைவரிசை

[மந்துவில்]

துன்னாலைப் பகுதியில் அண்மையில் திருடர்களால் துவிச்சக்கரவண்டி ஒன்று திருடப்பட்டுள்ளது

இப்பகுதியைச் சேர்ந்த சிவராசா என்பவரது வீட்டிலே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இரவு 11. 30 மணியளவில் உட்புகுந்த திருடர்கள் கோழிக் கூட்டினை உடைத்த போது கோழிதிருடும் முயற்சி கைகூடாததன் காரணத்தால் துவிச்சக்கரவண்டியினையும், இடம் பெயர்ந்து தங்கியிருந்த அயல் வீட்டவர்களின் கிணற்று வாளியினையும் திருடிச் சென்றுள்ளனர்.

(த-39)

# கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு தெரிவு செய்யப்பட்டோர் பெயர் விபரம் வருமாறு

(யாழ்ப்பாணம்)

2000—2001 கல்வியாண்டுக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம்:

திரு. ரி. ஜெயக்குமார்
யா- கொக்குவில்
ஸ்தான சி. கி. த. க.
திருமதி என். பானுமதி
யா. தம்பசிட்டி
மெ. மி. த. க. பாடசாலை
செல்வி பி. யமுனா
யா- தம்பசிட்டி
மெ மி. த. க. பாடசாலை
திருமதி ஏ. கவிதா
யா- ஏழாலை
மகாவித்தியாலயம்
திருமதி எஸ். தயாநிதி
யா- வட்டு மத்திய கல்லூரி
திரு. ரி. அருந்தவசீலன்
யா- நெல்லியடி மெ. மி. த. க.
செல்வி கே. ருக்மணிதேவி
யா- நெடுந்தீவு மங்கயற்கரசி வித்தியாலயம்
செல்வி பி. கலாதேவி
யா- சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம்
செல்வி எம். வசந்தராணி
யா- நவக்கிரி அ. மி. த. க. பாடசாலை
செல்வி ரி. கமலாசனி
யா- சுன்னாகம் திருஞான சம்பந்தா
செல்வி எம். சுபாசினி
யா- ஆனைப்பந்தி மெ. மி. த. க. பாடசாலை
செல்வி ஆர். பரமேஸ்வரி
யா- பாலாவோடை அ. த. க.
திரு. எஸ். சுரேஸ்குமார்
யா- ஆவரங்கால் மகாஜனா
செல்வி எஸ். ரஜனி
யா- நாரந்தனை றோ. க. த. க. பாடசாலை
செல்வி ப. ஸ்ரீலதா
யா- புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாலயம்
திரு. கே. குணசீலன்
யா- கோட்டுப்புலம் அ. த. க.
செல்வி கே. நிலாந்தி
கிளி- பளை மத்திய கல்லூரி
செல்வி கே. கமலாதேவி
யா- வியாவில் சைவ வித்தியாவயம்
திருமதி ஜே. ஆர். சுரேஸ் ஒகஸ்ரின் யா- புனித சம்பத்தரிசியார் கல்லூரி
செல்வி ஆர். பிரியதர்சினி
யா திருநெல்வேலி அ. த. க.
திருமதி ரி. தெய்வரதி
யா- வல்வெட்டி விநாயகர் வித்தியாயலம்
திரு. ரி. ஸ்ரீதரன் யா- பெரிய புலம் மகாவித்தியாலயம்
திரு. எம். சத்தியகுமார்
யா- பெரியபுலம் மகாவித்தியாலயம்
திரு. எஸ். மகாதேவா யா உடுப்பிட்டி சைவப்பிரகாசா
செல்வி ஜெ பகீரதி யா- கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்
திருமதி ஏ. எஸ். சாந்தினி
யா- பண்ணாகம் மெய்கண்டான் மத்
திரு. என். அன்பழகன் யா- உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
செல்வி எஸ். மதிவதனி
யா- கைதடி முத்துக்குமார சுவாமி வித்தியாலயம்
திரு. ஏ. ஜே. நைல்ஸ்
யா- புத்தூர் சோமஸ்கந்தா
திரு. கே. மனோகரன்
யா- சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாலயம்
செல்வி என். யசோதா
யா- சுப்பிரமணிய வித்தியாலயம்
திருமதி எஸ். ஸ்ரீபவானி
யா- தம்பசிட்டி மெ. மி. த. க. பாடசாலை
திரு. வி. துவாரகன் யா- சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம்
செல்வி எஸ். அமலோற்பவம்
யா- மாலலித்துறை றோ. க. பாடசாலை
திரு. ஆர். சுதன் யா- மிருசுவில் அ த. க பாடசாலை
செல்வி வி. இந்துமதி யா- மயிலணி சைவமகா வித்தியாலயம்.
திரு. ரி. பரமேஸ்வரன் யா- சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயம்
செல்வி எஸ். சிவகாமசுந்தரி
யா- கோட்டைக்காடு அ. த. க. பாடசாலை
திருமதி ஆர். பாமினி யா- கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்
செல்வி ரி அனுலா யா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்
செல்வி எம். மதிச்செல்வி
யா- கோண்டாவில் சி. சி. த. க. பாடசாலை
திருமதி எஸ். வினோசராணி
யா- இந்து ஆரம்ப பாடசாலை
செல்வி ஆர். ராசமலர் யா- புங்குடுதீவு மகாவித்தியா
திருமதி யு. சுமதினி யா- கட்டைவேலி யாக்கரு வினாயகர் வித்தியாலயம்
செல்வி வி சுசீலா யா- கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தியாலயம்
திருமதி ரி. ஞானாம்பிகை
யா- சாவகச்சேரி சத்தியாமன் வித்தியாலயம்
திரு. என் தவசோதிநாதன்
யா- கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்
திருமதி வை. பவானி யா- புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயம்
செல்வி வி. தோகைநாயகி
யாழ்- நெடுந்தீவு பாரதி வித்தியாலயம்
செல்வி கோமதி யா- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
திருமதி கே. ஜெயந்தி யா- கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தியாலயம்
செல்வி எஸ். டெவிசியா
யா- புனித சார்ள்ஸ் மாக வித்தியலயம்
செல்வி ஆர். நிருபா
யா- வரணி ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலயம்
திருமதி ரி. யோகராஜா
யா- வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்
செல்வி வி. பங்கயற்செல்வி
யா- இணுவில் இந்துக் கல்லூரி
செல்வி ஏ. ஜெயராணி
யா- சுழிபுரம் ஐக்கியசங்க வித்
செல்வி கே. ரஜனி
யா- புத்தகலடி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம
செல்வி எஸ் ஜெயச்சந்திரா
யா- எழுதுமட்டுவாள் கணேச வித்தியாலயம்
திருமதி கே. இந்துமதி
யா- அல்லாரை அ. த. க. பாடசாலை
திருமதி எம். விக்னேஸ்வரி
யா- அல்லாரை அ. த. க. பாடசாலை
செல்வி பி. மைந்தினி யா- ஸ்தான சி. சி. த. க.
திரு. பீ. பாலமுரளிதரன்
யா- திருநெல்வேலி த. க. பாடசாலை
திருமதி கே. ஜெயகௌரி
கிளி- கண்ணகையம்மன் வித்தியாலலம்
செல்வி கே. கீதாஞ்சலி
யா- இமையாணன் அ. த. க. பாடசாலை
செல்வி ரி. சுகுணமதி
யா- கட்டுடை சைவ வித்
திரு. கே. பிரபாகரன்
யா- தொண்டைமானாறு வீரகத்தி விததியாலயம்
செல்வி எஸ் அருட்செல்வி
யா- காரைநகர் தியாகராஜ ம. ம. வித்தியாலயம்
செல்வி எஸ். சுகிர்தா
யா- மயிலிட்டி றோ. க. த. க. பாடசாலை
செல்வி கே. றஞ்சினி
யா- கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்
செல்வி ஆர். யோகேஸ்வரி
யா- அனலைதீவு தெற்கு அ. த. க. பாடசாலை
செல்வி வி. சுமதினி
யா- நயினாதீவு ஸ்ரீ கணேச வித்தியாலயம்
செல்வி ஆர். சாரதா
கிளி- பளை மத்திய கல்லூரி
செல்வி ஆர். மஞ்சுளா
யா- காரைநகர் தியாகராஜ ம. ம. வித்தியாலயம்
செல்வி ரி. சுபாசினி
யா- நெடுந்தீவு மங்கயற்கரசி வித்தியாலயம்
செல்வி என். நளாயினி
யா- நெடுந்தீவு றோ. க. த. க
செல்வி எஸ். தவக்குமாரி
கிளி- மாசார் அ. த. க. பள்ளி
செல்வி ஏ. நிரஞ்சனா
யா- நெடுந்தீவு மகாவித்தியா
செல்வி என். நேசமலர்
யா- தொல்புரம் அ. த. க. பாடசாலை
செல்வி எம். கமலவேணி
யா- புனித மரியாள் வித், ஊர்
திருமதி ஏ. வளர்மதி
யா- செம்பியன்பற்று அ. த. க பாடசாலை
செல்வி பி. புஸ்பலீலா
யா- மாதகல் புனித யோசப் ம. வித்தியாலயம்
செல்வி என். சகுந்தலா
யா- காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி
திரு. ஐ. இளங்குமரன்
கிளி- பளை மத்திய கல்லூரி
செல்வி ஏ. ஜெனோதினி
யா- உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்
திரு. வி. அகிலன்
யா- தேவரையாளி இந்துக் கல்லூரி
செலவி ஆர். பாமதி
யா வட்டு மத்திய கல்லூரி
திரு. எஸ். கோகுலன்
யா- கைதடி நாவற்குழி அ. த. ப.
செல்வி கே. லலிதானந்ததேவி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீட்டிற்குள் புகுந்து தாக்கியோர் பிணையில் செல்ல நீதிவான் அனுமதி

(யாழ்ப்பாணம்)

வீட்டிற்குள் புகுந்து அங்கிருந்தோரை இரும்புக்கம்பி, மற்றும் வெற்றுப் போத்தல்களால் தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஆறு பேரையும், 5 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி அனுமதியளித்துள்ளார்.

அரசடி நல்லூரைச் சேர்ந்தவர்களான கிருஷ்ணகுமார் சுதாகரன், செல்லச்சாமி ஜீவராசா, ஸ்ரீகாந்தன் றெஜினோல்ட் சின்னராசா சுகிதரன், தம்பிப்பிள்ளை விமலச்சந்திரன், சிவஞானம் சக்திவேல் ஆகியோரே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

கடந்த 4 ஆம் திகதி இரவு வீட்டிற்குள் புகுந்து அங்கிருந்த ராஜேந்திரன், ரவீந்திரன் ஆகியோரை மேற்படி நபர்கள் தாக்கியதாக இவர்கள் மேல் யாழ். நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-12)

## அரச ஊழியருக்கான அதிகரிக்கப்பட்ட சம்பள கொடுப்பனவுகள் இம்மாதத்திற்குள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

அரச ஊழியர்களுக்கான அதிகரிக்கப்பட்ட சம்பள கொடுப்பனவுகள் இம்மாதம் 25 ஆம் திகதியளவில் வழங்கப்படவுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுபற்றிய சுற்று நிருபம் ஒன்று யாழ்- செயலகத்திற்கு கிடைத்துள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

இதேவேளையில் ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பது பற்றிய அறிவித்தல் இம்மாத இறுதிக்குள் கிடைக்கக்கூடும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(க-12)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 26 வீதமான வாக்காளர்கள் விடுவிக்கப்படாத பகுதியில் உள்ளனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள வாக்காளர்களில் 26 சதவீதமானவர்கள் விடுவிக்கப்படாத பிரதேசங்களில் வசிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலுடன் ஒப்பிடுகையில் விடுவிக்கப்படாத பிரதேச வாக்காளர்களின் தொகை 3 சதவீதம் அதிகரித்துள்வதாக தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் 2 இலட்சத்து 75 ஆயிரத்தி 485 பேர் வாக்களிக்கதகுதிபெற்றுள்ளார்கள்.

இவர்களில் 70 ஆயிரத்து 681 பேர் விடுவிக்கப்படாத பிரதேசங்களிலுள்ள தமிழர்கள் என்றும்,

இத்தொகை இம்மாவட்டத்திலுள்ள 2 இலட்சத்து 59 ஆயிரம், 52 தமிழ் வாக்குகளில் 34 சதவீதம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்புத் தொகுதியிலுள்ள 1 இலட்சத்து 27 ஆயிரத்து 532 வாக்காளர்களில் 16 சதவீதமான 20268 வாக்காளர்களும்.

கல்குடா தொகுதியிலுள்ள 78516 வாக்காளர்களில் 24 சதவீதமான 18 ஆயிரத்தி 754 வாக்காளர்களும் பட்டிருப்பு தொகுதியிலுள்ள 69 ஆயிரத்தி 437 வாக்காளர்களில் 47 சதவீதமான 31 ஆயிரத்து 659 வாக்காளர்கள் விடுவிக்கப்படாத பிரதேசத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கட்டடம் தகர்ந்தது

[வவுனியா]

கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் கடந்த 8 ஆம் திகதி மர்மப்பொருள் ஒன்றுவெடித்ததில் கட்டடம் ஒன்று தகர்க்கப்பட்டு அழிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காணி ஒன்றை துப்பரவு செய்து குப்பைகளைக்கூட்டி தீவைத்துவிட்டு சென்ற போதே இவ்வெடிவிபத்து நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

[ந-7]

## பட்டிருப்பு கல்வி வலயத்திற்கென 30 இலட்சம் ரூபா செலவில் கட்டிடம்

(மட்டக்களப்பு)

பட்டிருப்புக் கல்வி வலயத்திற்கென 30 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நிரந்தர கட்டடம் தபால் தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவினால் திறந்து வைக்கப்பட்டது.

பட்டிருப்பு வலய அதிகாரி கே. இராசதுரை, வடகிழக்கு மாகாண பிரதிபிரதம செயலர் கே. வடிவேலு உட்பட பலர் கலந்து கொண்டனர். இவர்களின் வருகையை அடுத்து இப்பகுதியில் பாதுகாப்புகள் பலப்படுத்தப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (க-60)

## இராசி பலன்

17-8-2000
(ஆவணி வியாழன்)
துதியை
பி. ப 1.11 வரை
பூரட்டாதி வைகறை
5.56 வரை
இராகுகாலம்
1.35- 3.05 வரை
சுபநேரம்
7.35 - 9.05 வரை

**மேடம்**
புதிய பொருள் சேர்க்கை, தாய்வழி உறவு. குடும்ப சுகம்

**இடபம்**
பிரயாணம், பொருள்வரவு தலைமை தாங்கல்

**மிதுனம்**
குடும்பக்கவலை, பிரயாண அலைச்சல், சிறு வியாதி

**கடகம்**
வீண்பழி நோயினால் துன்பம், இருப்பிட வசதிக்குறை

**சிங்கம்**
நண்பர்களின் உறவு, பிரயாணம், உல்லாசம்

**கன்னி**
நிலைக்கேடு, உறவினர் வெறுப்பு, கடன் தொல்லை

**துலாம்**
வயிற்றுக் கோளாறு, உணர்ச்சிவசப்படல், முயற்சி பலிதம்

**விருச்சிகம்**
நம்பிக்கைக்குறை, தொழில் தாமதம், உடல் நலசுகம்

**தனு**
புதிய பொருள் வரவு, நண்பர் விரோதம், பிரயாணக் கஷ்டம்

**மகரம்**
விதண்டா வாதம், பணக் கஷ்டம், வியாதி

**கும்பம்**
உடல் நல சுகம், முயற்சிபலிதம், கலகலப்பு

**மீனம்**
உறவினர் விரோதம், பிரயாணத்தடை, வீண் செலவு

(பழைய நேரப்படி கணிக்கப் பட்டது)

வளவன்

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர)

## மாதிரிப் பரீட்சை - 2000

### விஞ்ஞானம் ஆக்கம்: மேஜா பஞ்சலிங்கம்

### பகுதி I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**பின்வரும் வினாக்களுக்கான பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக**

1) ஒளித் தொகுப்பு தாவரங்களில் நடைபெறுவது இதற்கான பிரதான சக்தி முதல்
(1) காபனீரொட்சைட் நீர் (2) பச்சயம் (3) தாவரம் (4) சூரியன்

2) புறச் சூழலில் நிகழும் மாற்றங்களை மனிதனுக்கு அறிவிப்பது எது?
(1) சமிபாட்டுத் தொகுதி (2) நரம்புத் தொகுதி
(3) அகஞ்சுரக்கும் தொகுதி (4) குருதிச்சுற்றோட்டத் தொகுதி

3) கோபுர உச்சியில் இருந்து சுயாதீனமாக போடப்படும் ஒரு பந்து விழும் பொழுது
(1) சீரான வேகத்துடன் விழும்
(2) அது விழுந்து கொண்டிருக்கையில் அதன் வேகம் சீராக குறையும்
(3) அது விழுந்து கொண்டிருக்கையில் அதன் வேகம் சீராக கூடும்
(4) அதன் வேகம் பற்றி யாதொன்றும் கூறமுடியாது

4) பின்வரும் மூன்று செயற்பாடுகளையும் நடத்தும் மூன்று ஓமோன்களையும் ஒழுங்கு முறையாகக் காட்டும் கூட்டம் எது?
A— உடலின் அனுசேபத் தொழிற்பாடுகளின் வீதத்தை ஆளல்
B— பயப்பட்ட சந்தர்பங்களில் அதற்கு ஏற்றவாறுஉடலை ஒழுங்குபடுத்தல்
C— துணைப்பால் இயல்புகளின் வளர்ச்சியை ஆளல்
(1) அதிரினலின், தைரொட்சின், ஈஸ்ரஜன் (2) தைரொட்சின், ஈஸ்ரஜன், இன்சுலின்
(3) இன்சுலின், அதிரினலின், ஈஸ்ரஜன் (4) தைரொட்சின், ஈஸ்ரஜன், அதிரினலின்

5) கலத்தினுள் காணப்படும் உயிருள்ள பகுதி எது?
(1) புன் வெற்றிடம் (2) கருமுதலுரு (3) முதலுரு மென்சவ்வு (4) முதலுரு

6) ஒரு கண்ணாடி அரியத்தினூடாக வெள்ளொளி செல்லும் போது மிகக் குறைவாக விலகலுக்குள்ளாகும் நிறம்
(1) சிவப்பு (2) நீலம் (3) ஊதா (4) செம்மஞ்சள்

7) நுரையீரற் சிற்றறையொன்றினுள் காணப்படும் வளிமண்டல ஒட்சிசன் எவ்வாறாக மயிர்த்துளைக் குழாய்களுள் காணப்படும் குருதிக்கு அனுப்பப்படுகிறது
(1) உயிர்ப்பான கொண்டு செல்லல் மூலம் (2) பரவல் மூலம்
(3) குருதி அமுக்கம் மூலம் (4) கனவளவு வேறுபாடு மூலம்

8) X எனும் உலாகம் அதன் ஒட்சைட்டைக் காபனுடன் சேர்த்து சூடாக்குவதன் மூலம் தயாரிக்கபடுகிறது. Y எனும் உலோகம் உருக்கப்பட்ட அதன் குளோரைட்டை மின்பகுப்பதன் மூலம் தயாரிக்கபடுகிறது. Z எனும் உலோகம் உலோகத் தாதுவில் இருந்து வேறாக்கிப்பெறப்படுகிறது இம் மூன்று உலோகங்களினதும் தாக்குதிறன் குறைவடைந்து செல்லும் ஒழுங்கு
(1) X, Y, Z (2) Y, X, Z (3) Y, Z, X (4) Z, Y, X

9) மூலகம் ஒன்றின் திணிவு எண் 23 ஆகும் அதன் கருவிலுள்ள நியூத்திரன்களின் எண்ணிக்கை 12 ஆகும். இம் மூலகம்
(1) ஒரு வலுவளவுள்ள உலோகம் (2) ஒரு வலுவளவுள்ள அல்லுலோகம்
(3) சடத்துவ வாயு (4) இருவலுவளவுள்ள உலோகம்

10) மனிதப் பெண்ணின் உடற்குழியில் உள்ள இரு சூலகங்களும் மாறிமாறி சூல்களை வெளிவிடுகின்றன. ஒரு சூலகம் சூலை வெளிவிட்டு குறைந்தது எத்தனை நாட்களின் பின் மற்றைய சூலகம் சூலை வெளிவிடும்
(1) 56 நாட்கள் (2) 2-4 நாட்கள் (3) 280 நாட்கள் (4) 28 நாட்கள்

11) பின்வருவனவற்றில் ஒரு மடிய (n) கலம்
(1) நரம்புக்கலம் (2) விந்து (3) காவற்கலம் (4) புடைக்கல விழயக்கலம்

12) செங்குருதிச் சிறுதுணிக்கைகள் உற்பத்தி செய்யும், உடைக்கப்படும் இடங்கள் ஒழுங்கு முறையில்
(1) ஈரல், பெருங்குடல் (2) என்பு, மண்ணீரல்
(3) புன்கரு, மண்ணீரல் (4) சிவப்பு என்புமச்சை, மண்ணீரல்

13) 280 HN மீடிறனுள்ள இசைக்கவை ஒன்று வளியில் அதிரச் செய்யப்பட்டது வளியில் ஒலியின் வேகம் 330 mls எனின் வெளிவரும் அலையின் நீளம்
(1) $330 \times 280$ m (2) $\frac{280}{330}$ m (3) $\frac{330}{280}$ m (4) $\frac{330}{2 \times 280}$ m

14) பின்வருவனவற்றுள் கார உலோக இயல்பு அல்லாதது எது?
(1) நீருடன் விரைவாக தாக்கம் புரிதல்
(2) நிற உப்புக்களைத் தோற்றுவித்தல்
(3) பன்சன் சுவாலையின் மீதுபிடிக்கும் போது நிறத்தை தோற்றுவித்தல்
(4) அதன் உப்புக்கள் நீரில் கரைதல்

15) உச்சி ஆட்சி என்னும் தோற்றப் பாட்டைத் துணையாகக் கொண்டு
(1) இறந்த புதர் வேலியொன்றினை ஆக்கிக் கொள்ளலாம்
(2) மிக உயரமான தாவரமொன்றினை ஆக்கிக் கொள்ளலாம்
(3) காய்த்தலை விரைவு படுத்திக் கொள்ளலாம்
(4) பெருமளவுக்குத் தாய்தாவரத்தை ஒத்தவின தாவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்

16) குறை கடத்தி இருவாயி எனப்படுவது பின்வருவனவற்றுள் எது?
(1) n வகைக் குறை கடத்தி (2) p வகைக் குறை கடத்தி
(3) P-n சந்தி (4) P-n-pதிரான்சிற்றர்

17) இயற்கையாக காணப்படக் கூடிய சேர்வை பின்வருவனவற்றுள் எது?
(1) கல்சியம் ஒட்சைட்டு (2) பெரிக்கு ஒட்சைட்டு
(3) கல்சியம் ஐதரொட்சைட் (4) சோடியம் ஐதரொசைட்

18) அமுக்கத்தை அளவிடப் பயன்படும் SI அலகு எது?
(1) மல்லிமீற்றர் இரசம் (2) சென்ரிமீற்றர் இரசம் (3) பஸ்கால் (4) நியூட்டனின் மீற்றர் இரசம்

19) பன்சன் சுவாலை ஒன்றில் கடுமையாக வெப்பமேற்றும் போது பிரிகை அடையாத பொருள்
(1) கல்சியம் காபனேற் (2) சோடியம் காபனேற்
(3) அமோனியம் நைற்றேற் (4) வெள்ளி நைதறேற்று

20) 4Kg திணிவின் மீது 2 $M/S^2$ ஆர்முடுகலை ஏற்படுத்த தேவையான விசை?
(1) $4 \times 2$N (2) 4/2 N (3) 2/4 N (4) $\frac{4 \times 2}{}$ N



[மிகுதி நாளைதொடரும்]

## பெண்மணி காயம்

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடப் பகுதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள்.சைக் கிள்விபத்தில் 55 வயதுடைய பெண்மணி தலையில்காயமடைந்த நிலையில் யாழ்.மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்:

கடந்த 14 ஆம் திகதிஇடம் பெற்ற இவ் விபத்தில் சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர் சுப்பிரமணியம் மீனாட்சி என்பவரே காயமடைந்தவராவார். (க-12)

## நகை பணம் திருட்டு

(துன்னாலை)

இளம் பெண் ஒருவருடைய பெறுமதி மிக்க நகை, பணம் அடங்கிய, அடையாள அட்டை என்பன இனம் தெரியாதோரால்அபகரித்துச் செல்லப்பட்டது.

நேற்று நண்பகலளவில் யாழ் மத்திய பஸ் நிலையப் பகுதியில் இத் துணிகரச் சம்பவம் இடம் பெற்றது.

மல்லாகத்தைச் சேர்ந்த பொன்னர் லிங்கநாதன் தவறஞ்சினிஎன்பவரே பிரஸ்தாப பெண்மணியாவார். (க-41)

## கோப்பாய்..

யா- வாதரவத்தை வித்தியாலயம்
செல்வி என். சிவகௌரி
யா- அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்
செல்வி கே. பிரமிளா
யா- அச்சுவேலி சரஸ்வதி வித்
செல்வி எஸ். பவானி
யா- இயற்றாலை அ.த.க. பாடசாலை
செல்வி எம். றோஜாநிர்மலா
யா- அரியாலை கிழக்கு அ.த.க
செல்வி ஏ. ஜெபராணி
யா- காரைநகர் தியாகராஜா ம.ம.வித்தியாலயம்
செல்வி எஸ். கமலாம்பிகை
யா- மட்டுவில் வடக்கு அ.த.க
செல்வி எஸ். பகீரதி
யா- கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்
செல்வி என். விஜிதா
யா- கரம்பொன் ஸ்ரீபுஸ்பம. வித்தியாலயம்
பாடசாலை
செல்வி ரி. கேதினி
யா- கச்சாய் அ.த.க
செல்வி ஏ. ஜெயந்தி
யா- அல்வாய் ஸ்ரீ லங்கா வித்தியாலயம்
செல்வி கே. குமுதினி
யா- தம்பசிட்டி அ.த.க. பாடசாலை
செல்வி எஸ். பாலகௌரி
யா- கற்கோவளம் மெ.மி. த.க. பாடசாலை
திரு. ரி. மோகனராஜ்
யா- ஏழாலை மேற்கு சைவ
திருமதி பி. யசோதா
யா- திருக்குடும்ப கன்னியர் மடம் வித்தியாலயம்
திரு. கே. பொன்னம்பலம்
யா- கெருடாவில் இ.த.க.
திருமதி எஸ். இன்பமலர்
யா-வல்லை மகளிர் ம. வித்தியாலயம்
செல்வி கே. சுதாளினி
யா-சங்கானை சிவப்பிரகாச ம. வித்தியாலயம்
செல்வி எஸ். கல்யாணி
யா- உடுவில் அ. மி. த. க பாடசாலை
செல்வி பி. றஜனி
யா- சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்.
திரு. ஆர் முருகதாஸ்
யா- மிருசுவில் அ. த. க. பாடசாலை
திரு. பி பிரதீபன்
யா - உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாலயம்
செல்வி எம்.யஸ்மின் ஜெயந்தி
யா-நல்லூர் புனித பெனடிக்றோ. க. த. க பாடசாலை
செல்வி ஆர். இந்துமதி
யா-அல்வாய் அம்பாள் வித்தியாலயம்
திருமதி சி. உதயகலா
யா-அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்

## இன்று ஒரு தகவல்

# நிலவுக்கும் வயிற்றுக்கும் காந்த ஈர்ப்புவிசை

நிலவுக்கும் பூமிக்கும் சம்பந்தம் இருக்குன்னு சொன்னா அதை நீங்க நம்புவீர்களா?

ஆனா, நிலாவுக்கும் நம்ம வயிற்றுக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று சொன்னால் அதை நீங்க நம்புவீர்களா? நான் சொன்னா சந்தேகப்படுவீர்கள்?

இவ்வினாய்ஸ் பல்கலைக்கழகத்தில் உள்ள ஒரு ஆராய்ச்சியாளர் இதைச் சொல்கிறார்; அந்த பேராசிரியர் 5 வருடமா ஒரு ஆராய்ச்சி பண்ணினார். 100 பேருக்குமேல் சோதனையும் பண்ணிப் பார்த்தார். அப்படி பண்ணி பார்த்து விட்டுச் சொன்னார் வயிற்றுவலிக்கும் நிலாவுக்கும் சம்பந்தம் இருக்கு! அதாவது இன்னமும் குறிப்பாகச் சொல்லணும் என்றால் அல்சருக்கும் பௌர்ணமிக்கும் சம்பந்தம் இருக்குது என்றார்.

அவர் பல பேரை சோதனை பண்ணிப் பார்த்தார். அவர்களுக்கு எல்லாம் மார்புவலி, அல்சர் எல்லாம் பௌர்ணமி காலத்தில் அதிகமாக இருந்ததாம். அது சரி,

2½ லட்சம் மைலுக்கு அப்பாலே இருக்கிற அவ்வளவு பெரிய நிலவுக்கும் இங்கே இருக்கிற சிறியவயிற்றுக்கும் எப்படி சம்பந்தம் இருக்கமுடியும்?

அதுக்கு காரணம் என்ன என்றால். பூமிக்கும், நிலவுக்கும் இடைபே ஏற்படக்கூடிய காந்த ஈர்ப்பு சக்திதான் காரணமாம். மனுஷனின் உடம்பையும், மனதையும் இந்த சக்தி பாதிக்குதாம். காந்த சக்தி என்றால் அது இரும்பைத்தானே பாதிக்கும்! உடம்பை எப்படி பாதிக்குது? மனுஷன்உடம்பையும்மனதையும இந்தசக்திபாதிக்குதாம். மனுஷன் உடம்பிலேயும் இரும்பு இருக்கிறது அதனாலே அந்த ஈர்ப்புசக்தி நம்ம உடம்பை பாதிக்குது! இதை நிரூபிக்கிறதுக்கு ஒரு சோதனை கூடபண்ணி பாத்திருக்கிறார்கள்; எப்படியென்றால்,

முதலில் ஒரு கூண்டு தயார் பண்ணினார்கள். அந்த கூண்டுக்குள்ளே ஒரு எலியை பிடிச்சு விட்டார்கள்; அந்த எலி சுத்தி சுத்தி ஓடியது.

காந்த சக்தியை அந்த கூண்டுக்குள்ளே உண்டாக்கினார்கள். உடனே அந்த எலியி-டம் ஒரு மாறுதல்.

அது யோசனை பண்ணுது மயங்கி நிற்கிறது. சுத்தி ஓடறது குறையுது. இதுலே இருந்து என்ன தெரியுது?

காந்தம் உண்டாக்கக்கூடிய ஈர்ப்புசக்தி அந்த எலியோட உடம்பையும் மனதையும் பாதிக்குது.

இதேமாதிரிதான் பூமிக்கும், நிலவுக்கும் இடையிலே ஏற்படக்கூடிய காந்தசக்தி மனிதனுடைய உடம்பையும் மனதையும் பாதிக்குது;

எங்க ஊர்ல ஒரு பாட்டி இருக்கிறார்கள். அவர்கள் அப்பவே சொல்லுவார்கள். அமாவாசையிலே மருந்து சாப்பிடாதே பௌர்ணமியிலே மருந்து சாப்பிடாதேண்ணு அதையெல்லாம் யாரும் கேட்பதில்லை.

பல பேருக்கு அமாவாசையன்றைக்கு வயிற்றுக்கு ஒய்வு கொடுப்பது இப்பவும் வழக்கமாகத்தான் இருக்கிறது.

இப்ப உள்ள டாக்டர்கள் கெடுவைக்கிறது உண்டு. இன்னமும் ஒரு 24 மணி நேரம் தாண்டினால் தான் எதையும் உறுதியாக சொல்ல முடியும்; அந்த நேரம் தாண்டிட்டா நோயாளி ஆபத்தான கட்டத்தைத் தாண்டிட்டார் என்று அர்த்தம் என்பார்கள்.

இதே மாதிரி அந்த பாட்டியும் கெடுவைப்பாங்க என்ன பாட்டி அந்த ஆளு பொழைக்குமா? என்று கேட்டா எதுக்கும் இந்த அமாவாசை தாண்டட்டும். அதுக்குப்புறம் சொல்றேன் என்பார்கள்.

இப்படி பல பேருக்கு கெடு வச்சிக்கிட்டிருந்த அந்த பாட்டியையும் ஒரு அமாவாசை வந்து அழைத்துக்கொண்டு போனது.

பூமிக்கும் நிலவுக்கும் இடையிலே ஏற்படக்கூடிய காந்த சக்தி மனிதனுடைய மனசையும் பாதிக்குது

இதை மனோதத்துவ டாக்டர்களே ஒத்துக்கிறாங்க. புத்தி சுவாதீனம் இல்லாதவங்க அதிகமா நடந்துக்குவாங்க வழக்கமா என்னை வந்து பார்க்கிற ஒரு சிநேகிதன் ஒரு நாள் வரவில்லை.

மறுநாள் அவனைப் பார்த்து ஏன்டா நேற்று என்னை வந்து பார்க்கலே என்றேன். நேற்று பௌர்ணமி அதனாலே உன்னிடம் வரவில்லையென்றார்.

தென்கச்சி சுவாமிநாதன்

## நல்லையில் சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய இந்துப்பேரவையின் நல்லைக்கந்தன் உற்சவகாலத் தெய்வீக நிகழ்ச்சிகள் தொடரில் இன்று வியாழக்கிழமை ''நானோ இதற்குநாயகமோ'' என்னும் தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் சொற்பொழிவாற்றவுள்ளார்.

இந்நிகழ்வு அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் பி.ப 2.00மணிக்குஇடம் பெறவுள்ளது. [செ]

## வாராந்த நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைபண்பாட்டுப் பேரவையினரின்வாராந்தநிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை, பேரவை உறுப்பினர் க. அருள்லிங்கத்தின் அறிமுகவுரையைத் தொடர்ந்து எஸ். எஸ். றஜீந்திரன் வழங்கும் புல்லாங்குழல் இன்னிசை இடம் பெறவுள்ளது. (செ)

## சிறப்பு மலர் வெளியீடு

(அரியாலை)

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமத்தின் 31 ஆண்டுகள் பூர்த்தியைமுன்னிட்டுசாரதா அன்னையின் படம் தாங்கிய சிறப்பு மலர் ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது;

(த-106)

## இலவச மருத்துவ பரிசோதனை

(ஊர்காவற்றுறை)

தீவக லயன்ஸ் கழகமும் கொக்குவில் லயன்ஸ்கழகமும் இணைந்து நடத்திய இலவச மருத்துவ பரிசோதனை முகாம் அண்மையில் புளியங்கூடலில் இடம் பெற்றது.

மேற்படி பரிசோதனை முகாமில் இரத்த அழுத்தம், நீரிழிவு, கண்பரிசோதனை, மார்பு புற்றுநோய், வாய்ப் புற்றுநோய், பொது மருத்துவ பரிசோதனைகள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டன. (செ-75)

## நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைப் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடும் பணியில் இன்று வியாழக் கிழமை, காலை 9.00 மணிதொடக்கம் மு.ப. 10.30 மணி வரை இராமலிங்கம் வீதி,

## நல்லூரான் திருவடிக்கு - 13



### "பாருக்குப் பதில் சொல்லவா"

முருகாநீ வலம்வரும் காட்சியை ஒருகணம்
முதியோர்கள் காண அருள்செய்
முடியாமல் உன்னிடம் சரண்புகுந் தார்மன
முட்டுக்க ளையவரு வாய்

பருகாமல் அருந்தாமல் பாவங்கள் நீக்கிடப்
பயபக்தி தருமடியர்க்கு
பாலிக்கு முன்கருணை சோபிக்க வேண்டுமே
பாருக்குப் பதில்சொல்ல வா!

சி. சிவஞானராஜா, அளவெட்டி

### நல்லூர்க் கந்தன் பாமாலை

செல்லடிபோற் சத்தம் சேயோன் முழவதிர
எல்லோருங் கண்ணால் எழில் பருக நல்லூரா
கண்ணாரக் கண்டு களிப்புற்றேன் பூசனையை
எண்ணங்கள் ஈடேற வென்று.

இறைமணி சி. இராசரத்தினம்

### அருள்வாய் முருகா...!

வள்ளி மணவாளா வடிவேல் அழகா
தீராத வினைகள் தீர்த்தருள்வாய்
ஓயாத கவலைகள் மாற்றிடுவாய்
ஓங்கார ரூபனே ஓம் சக்தி பாவனே!
ஆங்காரமாய் அசுரரரை அழித்திட்டாய்
அன்பான தேவர்கள் வாழ்த்திடவே
ஆறுமுகனாய் ரதரேறி வாழ்ந்தவனே
உலகை காத்து நிற்பவனே
உயிர்கள் நலம் பெற
அருள் பொழிவாயே

ஆ. சனக்குமரன்

### நல்லை முருகா

கோவில் வாசலில் இளைஞர் கூட்டம்
பாரீர் முருகன் தர்மம் கூறி
பரட்டிர் படுத்து அங்க பிரதட்சை
நாட்டில் அமைதி வேண்டி நிற்பர்

உள்ளே புகுந்தார் அடி அழிப்பவர்கள்
மூள்ளே விழாமல் பெண்கள் கூட்டம்
துள்ளி திரியும் சிறுவர் சிறுமியர்
துல்லியமாய் பா பாடும் பக்தர்கள்

டுக்குள்ளே ஒரு எலியை பிடிச்சு விட்டார்கள்; அந்த எலி சுத்தி சுத்தி ஓடியது.

காந்த சக்தியை அந்த கூண்டுக்குள்ளே உண்டாக்கினார்கள். உடனே அந்த எலியி

என்னை வந்து பார்க்கலே என்றேன். நேற்று பௌர்ணமி அதனாலே உன்னிடம் வரவில்லையென்றார்.

தென்கச்சி சுவாமிநாதன்

பூசி போடும் பணியில் இன்று வியாழக் கிழமை, காலை 9.00 மணிதொடக்கம் மு. ப. 10.30 மணி வரை இராமலிங்கம் வீதி, வாலை அம்மன் சனசமூக நிலையத்திலும்,

மு. ப. 11.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை இராமலிங்கம் வீதி, ஞானவைரவர் சனசமூக நிலையத்திலும்,

பி. ப. 12.30 மணிதொடக்கம் 1.30 மணிவரை சட்டநாதர் வீதி, கலைத்தமிழ் கலாமன்றம் சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி போடப்படும். (செ)

உள்ளே புகுந்தார் அடி அழிப்பவர்கள்
முள்ளே விழாமல் பெண்கள் கூட்டம்
துள்ளி திரியும் சிறுவர் சிறுமியர்
துல்லியமாய் பா பாடும் பக்தர்கள்

சி. குமாரலிங்கம்

## இனம் தெரியாதோரின் துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் பலி; இருவர்காயம்

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றும் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

பூந்தோட்டப் பகுதியில் சட்ட விரோதமான கள்விற்பனையில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்பட்ட இருவரை வவுனியா மதுவரி இலாகாவினர் கைதுசெய்து கொண்டு சென்ற வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இத் துப்பாக்கிப் பிரயோகத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரே மரணமடைந்தவராவார்.

மதுவரித்திணைக்கள அதிகாரிகளில் இருவரும் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-உ)

## பரீட்சை ஒத்திவைப்பு

(கந்தர்மடம்)

யாழ். போதனாவைத்தியசாலையின் தாதிகள் பயிற்சிப் பாடசாலையின் 1 வது குறை நிரப்புப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது.

இப்பரீட்சை இன்று 17-ம் திகதியும், நாளை 18-ம் திகதியும் நடைபெறுவதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் இதுவரை வினாத்தாள் வந்து சேராமையால் பரீட்சை 18, 19 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான தாள்கள் கொழும்பில் இருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் மூலம் எடுத்து வரப்படவுள்ளது. (த-37)

## அகன்றிடுமே தொல்லைகள்

குன்றென நிமிர்ந்துள கோபுரம் வா எனும்
நாதமணி பண் உடன் பா இசைக்கும்
நல்லை வழி எலாம் கண்வழி கசிய
முருகா எனும் ஒலி மென்மன அடியவர்
வாய் இடை ஒலிக்கும் சிந்தினர் முரசம்
தேன் உறை மலர் தந்துமே உவந்தனரே
அழகன் வந்தனன் நல்லை வீதியிலே
தொல்லைகள் அகன்றன அகன்றன அகன்றனவே!

பவித்திரன்

## விபத்து

(துன்னாலை)

ரெலிகொம்நிறுவனத்தைச் சேர்ந்த ஹை-எஸ் வாகனமும் தனியார் மினிபஸ்சும் நேற்று மோதிக்கொண்டன.

நேற்றுப் பகல் யாழ். நகரில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஹை-எஸ் வாகனம் சேதத்திற்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது. (க-41)

## திருத்தப்படாத சனசமூக நிலையம்

சுன்னாகம் தெற்கு சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள காந்தரூபன் சனசமூக நிலையம் பலகாலமாக இயங்காததையடுத்து அப்பகுதி மக்களிடையே பெரும் அதிருப்தி நிலை ஏற்பட்டுள்ளது. (க-14)

## யாழ். மாவட்டத்தில் 34 லட்சம் ரூபா செலவில் வைத்தியசாலை கட்டடங்கள் புனரமைப்பு

யாழ். மாவட்டத்தில் சுகாதார சேவையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் திட்டப் பிரிவு 34 லட்சம் ரூபா செலவில் வைத்தியசாலைக் கட்டடங்களை அமைத்தும் புனரமைத்தும் உள்ளது.

உடுவிலில் 15 லட்ச ரூபா செலவில் மத்திய மருந்தகமும், அளவெட்டியில் 17 லட்சம் ரூபா செலவில் பிரசவ விடுதியும் புதிதாக அமைக்கப்பட்டதுடன் இரண்டுலட்ச ரூபா செலவில் ஏழாலை மத்திய மருந்தகம் புனரமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இப்புதிய கட்டடங்களை பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி உமா சிவபாதசுந்தரம் திறந்து வைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-8)

## கொன்கோட் விமானத்தின் சேவையை பிரிட்டன் நிறுத்தியது

[லண்டன்]

கொன் கோட்விமானத்தின் சேவைகளை பிரிட்டன்இடை நிறுத்தியுள்ளது.

மேற்படி விமான சேவைகளை உடனடியாகவே நிறுத்துமாறு நேற்று முன் தினம் முதல் பிரிட்டன் அரசு விமானத்துறை அதிகாரிகளுக்கு கட்டளை பிறப்பித்துளளது.

பிரான்ஸ் தயாரிப்பான கொன்கோட் விமானத்தின் பாதுகாப்புக்குத் தகுந்த பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படவில்லை என்ற காரணத்தின் பேரிலேயே மேற்படி விமானசேவைநிறுத்தப்பட்டுள்ளதாய் பிரிட்டன் அரசுத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேசமயம், பிரான் ஸில் அண்மையில் கொன்கோட் விமானம் விபத்துக்குள்ளாகி அதில்பயணம்செய்த 100 இற்கும் மேற்பட்டோர் இறந்த சம்பவத்தின் பின் அங்கும் மேற்படிவிமானசேவை இடை நிறுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (க-உ)

## முல்லைத்தீவிலிருந்து இந்தியா சென்ற 6 பேர் பொலிஸாரால் கைது

(சென்னை)

தமிழ் நாட்டிற்கு கடந்த திங்கட்கிழமை படகு மூலம் சென்ற 6 ஈழத்தமிழர்களில் நால்வர் இராமேஸ்வரப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து இரு குடும்பங்களைச் சேர்ந்த 6 பேர் கண்ணாடிநார் இழைப்படகுகளில் வந்ததாகவும் இவர்கள் வந்த படகு கைப்பற்றப்பட்டதாகவும் இராமேஸ்வரப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் விசாரணைகள் முடிவடைந்த பின் அகதிகள் முகாமில் குடியமர அனுமதிக்கப்படுவர். இப்புதிய நடைமுறை கடந்த திங்கள் தொட்டு அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஏனைய இருவரும் அகதிகள் மறுவாழ்வு முகாமிற்கு அனுப்பப்படவுள்ளனர்.

இதேசமயம், கடந்த ஞாயியன்று இலங்கையில் இருந்து சென்ற 14 ஈழத்தமிழர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் உள்ள அரசு அரங்கத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு விசாரணை முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். [உ]

## தென்பகுதி கடற்பரப்பில் மூழ்கிய ரஷ்ய அணுகுண்டு நீர்மூழ்கிக் கப்பலை மீட்பதற்கு அமெரிக்கா தயார்

### வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவிப்பு

(மொஸ்கோ)

தென்பகுதி கடற்பரப்பில் செயலிழந்துள்ள ரஷ்ய நீர்மூழ்கிக்கப்பலை மீட்பதற்குத் தேவையான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக அமெரிக்காவின் வெள்ளை மாளிகைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரண்டாயிரம் அடி ஆழம் வரை சென்று தேடுதல் நடத்தக்கூடிய இரு அதி தொழில் நுட்ப நீர்மூழ்கிக் கப்பல்கள் தம்மிடம் இருப்பதாகவும், இது தொடர்பாக இருநாட்டு பாதுகாப்பு அமைச்சுக்களும் தொடர்பு கொண்டிருப்பதாகவும் வெள்ளை மாளிகை வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இதனிடையே வேண்டிய உதவிகளுடன் மீட்புப் பணிகளை மேற்கொள்ளும் நோக்கில் தமது அதி நவீனரக நீர்மூழ்கிக் கப்பல்புறப்பட்டு விட்டதாக மொஸ்கோ தகவல் தெரிவித்துள்ளன. [உ]

## மென்ரொச்ஸ் போதைப் பொருள் பொலிஸாரினல் கைப்பற்றப்பட்டது

### தென்னாபிரிக்காவில் சம்பவம்

தென்னாபிரிக்கப் பொலிஸார்4.5தொன்எடையுடைய ... கடத்துவதில் ஈடுபட்டிருந்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்

# சீனாவில் நிலச்சரிவு4 மாடிக்கட்டடம்

## சரிந்ததில் 45 பேர் சிக்கினர், 9 சடலம் மீட்பு

(பீக்கிங்)

தென் மேற்குச் சீனாவில் பெய்துவரும் தொடர்மழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் 18 பேர் இறந்துள்ளனர்.

நான்கு மாடிகள் கொண்ட மின்சார நிலையம் ஒன்று நிலச்சரிவு காரணமாக சரிந்து வீழ்ந்ததில் அங்கிருந்த 45 பேர் கட்டட இடிபாடுகளுக்கிடையே சிக்குண்டனர்.

இதில், 27 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். ஒன்பது பேரின் சடலங்களை மீட்புப் பணியாளர்கள் தேடிக் கண்டுபிடித்துள்ளனர்.

ஏனைய ஒன்பது பேர் பற்றிய தகவல்கள் எதுவும் தெரிய வரவில்லை. மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம் பெற்று வருகிறது. (உ)

## தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம்

(சுவா)

பிஜி தீவின் தலைநகர் சுவாவில் அண்மையில் தேசிய தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுவோரால் இராணுவ வீரர் ஒருவரும் காவற்படை வீரர் ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இச் சம்பவத்தில் 3 இராணுவத்தினர் காயமடைந்தனர். (உ)

## மத்திய அமைச்சர் ரங்கராஜன் மருத்துவ மனையில்

(புதுடில்லி)

மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமரமங்கலம் திடீரென ஏற்பட்ட நோய் காரணமாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அகில இந்திய மருத்துவக் கழக மருத்துவமனையில் விசேட வைத்திய சிகிச்சைப் பிரிவில் அவர் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

## 40 ஆயிரம் பேர் பசியால் வாட்டம்

(லண்டன்)

மொஸாம்பிக்கில் உள்ள கம்பாலா எனும்இடத்தில் 40 ஆயிரம் பேர் பசியால் வாடுவதாக ஐக்கிய நாடுகள் உணவுத் திட்டம்அறிவித்துள்ளது. (உ)

## செய்திப்பரல்

## நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்டதன் எதிரொலி சுதந்திர தினம் பிசுபிசுப்பு

(பெங்களூர்)

கன்னட நடிகர் ராஜ்குமாரின் கடத்தல் விவகாரம் கர்நாடக மாநில சுதந்திர தினத்தை சோகமடையச் செய்து விட்டது என்று முதல்வர் எஸ்.எம் கிருஷ்ணா தெரிவித்தார்.

தொடர்ந்து அதிபர் உரையாற்றுகையில்; தனது அரசு தமிழக அரசின் ஒத்துழைப்போடு பிரச்சினைக்கு சுமூகமான முடிவை ஏற்படுத்தவும் நடிகர் ராஜ்குமாரை பாதுகாப்பாக விடுதலை செய்யப்படவும் தீவிரமுயற்சி எடுத்துக் கொண்டிருப்பதாகவும் கூறினார்.

## பாகிஸ்தான் ஆட்சி சபையில் மாற்றம் படைத்தளபதிகளுக்கு முக்கிய இடம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியின் பந்தோபஸ்து சபை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

நேற்று திடீரென்று இந்த மாற்றத்தினை ஜெனரல் முஷாரப் அறிவித்தார்.

கடந்த ஒக்டோபர் இராணுவப் புரட்சிக்குப் பின் இந்த சபையின் ஆலோசர்களாக செயல்பட்டு வந்த ஐந்து உறுப்பினர்கள் புதிய மாற்றத்தின்படி நீக்கப்பட்டார்கள்.

வெளியுறவு, நிதிவாணிபம் உள்துறை போன்றவற்றிற்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

ஜெனரல் முஷாரப்பின் தலைமையில் இயங்கும் இச் சபையில் முப்படைத் தளபதிகளும் நியமிக்கப்பட்டுள்ளார்கள.

வருங்காலத்தில் மக்கள் ஆட்சியில் படையினருக்கும் பங்கு இருக்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடனேயே இம்மாற்றம் ஏற்படுத்தப்பட்டது என்று கருத்து தெரிவிக்கப்படுகிறது, (து)

## நாட்டிற்கு சேவையாற்றிய பலருக்கு சுதந்திர தின விழாவில் கௌரவம்

### கலைஞர் வழங்கினார்.

(சென்னை)

நாட்டிற்கு அளப்பரிய சேவை செய்தபலர் இந்திய சுதந்திர விழாவின் போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

குறிப்பாக ஊனமுற்றோருக்கு பலவகையிலும் சிறந்த சேவையாற்றியோருக்கு தமிழக முதல்வர் மு.கருணாநிதி விருதுகள் வழங்கி கௌரவித்தார்.

இந்த வகையில் ஊனமுற்றோருக்கு சிறந்தசேவையாற்றிய மாவட்டத்தலைவராக தஞ்சை மாவட்ட தலைவர் விருது இராஜாராமுக்கும் சிறந்த டாக்டருக்கானவிருது டாக்டர் இராசேந்திரத்திற்கும் முதல்வர் மு.கருணாநிதியால் விழாவில் வழங்கப்பட்டது. [து.க]

## தகவல் தொழில் துறையில்

யோருக்கு தமிழக முதல்வர் மு.கருணாநிதி விருதுகள்

யால் விழாவில் வழங்கப்பட்டது. [து.க]



## தென்னாபிரிக்காவில் சம்பவம்

தென்னாபிரிக்கப் பொலிஸார் 4.5 தொன் எடையுடைய மென்ரொக்ஸ் போதைப் பொருளினைக் கைப்பற்றியுள்ளனர்.

தென்னாபிரிக்காவில் இவ்வளவு பெருந்தொகையுடைய போதைப் பொருள் கைப்பற்றப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையென தென்னாபிரிக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இங்கு கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக பிரசித்தமடைந்துள்ள மேற்படி மென்ரொக்ஸ் போதைப்பொருளினை நீண்டகாலமாகவே கடத்துவதில் !ஈடுபட்டிருந்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்போதைப் பொருள் இந்தோனேசியாவில் இருந்து கப்பல் மூலம் எலிஸபெத் துறைமுகமூடாக தென்னாபிரிக்காவுக்குக் கடத்திவரப்பட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதேசமயம், கைப்பற்றப்பட்ட மேற்படி போதைப் பொருளின் பெறுமதி 28 9 மில்லியன் அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. (உ)

---

உலக தரிசன அறிவுப் போட்டி- இல: 01

முழுப் பெயர் :-..........................................

முகவரி :-..........................................

..........................................

பிறந்த திகதி :-..........................................

போட்டியாளர் கையொப்பம்..........................................

பெற்ற புள்ளிகள்

---

★ ஜம்முகாஷ்மீரில் 10 ஆயுத தாரிகள் இராணுவத்தினரால் கட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

★ நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுதந்திரதினத்தையொட்டி முதல்வர் மு.கருணாநிதி நாட்டு மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

★ பாகிஸ்தானில் சிலர் கை விலங்குகளைமாட்டிக் கொண்டு ஊர்வலமாகச் சென்று சுதந்திரதினத்தைக்கொண்டாடினார்கள்.

★ பாகிஸ்தானை பயங்கரவாத நாடாகப் பிரகடனப்படுத்தும் படி அமெரிக்காவை இந்தியா கேட்டுள்ளது.

★ இராணுவத்தைக் கொண்டு சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்க வேண்டும் என்று ஜெயலலிதா கூறியிருக்கிறார்.

★ மகளிர் மசோதா குறித்து மாநிலங்களவையில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. (து)

---

# தகவல் தொழில் துறையில் தமிழகம் முதன்மை வகிப்பு

## முதல்வர் மு. கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

தகவல் தொழில் நுட்பத் துறையில் நாட்டிலேயே தமிழகம் தான் முன்னணி வகிக்கிறது என்றும் மென்பொருள் உற்பத்தித் துறையில் 96 ஆம் ஆண்டு 36 தொழிற்சாலைகள் இருந்தனவென்றும் இப்பொழுது 630,ற்கு மேற்பட்ட மென்பொருள் நிலையங்கள் பெருகிவிட்டன வென்றும் முதல்வர் மு. கருணாநிதி சுதந்திர தினவிழாவில் கொடியை ஏற்றி வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில்; கடந்த ஆண்டு மென் பொருள் ஏற்றுமதி மூலம் 1914 கோடி ரூபா கிடைத்ததென்று மேலும் எண்ணைவித்துக்கள் உற்பத்தித்துறையிலும் நெல் உற்பத்தித் துறையிலும் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்றும் கரும்பு உற்பத்தியிலே உலகிலே தமிழ்நாடு தான் முதலிடம் வகிக்கிறதென்றும் குறிப்பிட்டார். (க-து)

---

14 - 08 - 2000 வெளியான

உலக தரிசன அறிவுப்போட்டிக்கு

விடையனுப்ப வேண்டிய முடிவுநாள்

25 - 08 - 2000

முதல் மூன்று பரிசில்கள் தருபவர்:

**பூபாலசிங்கம் புத்தக நிலையம்,**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பண்பிலான் பெற்ற பெருஞ்
செல்வம் நன்பால்
கலந்தீமையால் திரிந்தற்று
-குறள்

# வலம்புரி

## பழைய குருடி

சாதனை செய்யும் மனப்பக்குவம் இல்லாத வெறுமை வெறும் போதனையால் பயனில்லையென்பதை தெட்டத்தெளிவாகக் காட்டி விட்டது. பழைய குருடி கதவைத் திறவடி என்று புதிய பிரதமர் கங்கணங் கட்டுகிறார். செய்வதைச் சொல்வதும் சொல்வதைச் செய்வதும் அரசியல் விற்பன்னர்களுக்குத் தேவை. பயனில்லாத வார்த்தைகளைப்பேசிக் குட்டையைக் குழப்பி நாட்டைக்குட்டிச் சுவராக்கும் மேதாவிகள் மலிந்து விட்டால் நாடு நலிந்து தானே போகும். இத்தனைகாலமும்அடக்க முடியாத பயங்கர வாதத்தை அடக்கமுனைகிறது புதியவிளக்குமாறு. விடுதலைப்போருக்கு சூட்டப்பட்ட பெயர் இன்னும் சாயம்போகவில்லை மாறி மாறி வரும் அரசியல் விற்பன்னர்கள் அழியாத சாயம் தான் பூசியிருக்கிறார்கள் போலும்.

ஒரு கட்டத்தில் கதிகலங்கி செய்வதறியாது ஏம்பலித்த கூட்டம் மேலும் கூன் நிமிர்ந்து கூரை தட்டுவது தான் வடிக்கை. அடக்கு அடக்கு என்று ஒரு புறம் சொல்கிறார்களே, எங்கே அடக்கிப் பார்க் கட்டும் என்னுமளவிற்கு வேகப் போய் விட்ட நிலையில் முருங்கையடிச் சாத்திரம் பார்க்கிற வெறுந்தலையர்களை வைத்துக் கொண்டு செங்கோன்மையை எதிர்பார்க்க முடியாது. எல்லா உறுமயக்களும், வீரவிதானாக்களும் நாட்டிலே அமைதி நிலவவிடப்போவதில்லை சனவிலே புலம்புவது போல. போதையில் உளறுவது போல பிரச்சினை இருந்தால் என்ற பழையநிலைக்குப் போவதும் கடந்து

# பிரிட்டன், கனடாவில் நம்மவர் பரிதவிப்பு

# மீண்டும் இங்கு வரும் நாள் ஏற்படுமா?

## இரத்த உறவுகளின் அங்கலாய்ப்பு இதுவே

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முழு நிலாநாள் கருத்தரங்கு கடந்த திங்கட்கிழமை யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமிமண்டபத்தில் நடைபெற்றது''புலம் பெயர்ந்தநாடுகளில் நமது இளைய தலைமுறை'' என்னும் தலைப்பில் ஸ்கந்த வரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு. திருமுருகன் உரையாற்றினார் அவ்வுரையில் தனது கனடா, இலண்டன் பயண அனுபவங்களையும் உள்ளக் குமுறலையும் வெளியிட்டார் அதன் தொகுப்பை இங்கு தருகிறோம்.**

எமது இளந்தலைமுறை தாயகத்தை விட்டுவெளியேறி அதாவது புலம் பெயர்ந்து உலகின் ஏனைய நாடுகளில் தஞ்சமடைந்து வாழ்வதற்கான முக்கிய காரணம் தமது உற்றார் உறவினர்களை வறுமையின் பிடியிலிருந்து மீட்பதற்கே ஆகும். அவ்வாறுசெல்பவர்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே தமது இலக்கை அடைய வேண்டியுள்ளது.

### புலப்பெயர்வு

இப்புலப்பெயர்வு இன்று நேற்று ஏற்பட்டதல்ல எமது நாடு பிரித்தானியஆட்சிக்குட்பட்டிருந்த காலத்திலிருந்தே சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் வேலை வாய்ப்புத் தேடி எம் மூன்னோர் புலம் பெயர்ந்தார்கள். அப்புலப் பெயர்வுக்கும் இன்றைய புலப் பெயர்வுக்கும் இடையேபாரிய வேறுபாடுள்ளது.

1971 தொடக்கம் 1975 வரையான காலப்பகுதியில் ஒரு புலப்பெயர்வு ஏற்பட்டது அரசியல் சர்ச்சை, பொருளாதாரப் பிரச்சினை குடும்பச் சுமை, வறுமை காரணமாக இளைஞர்கள் பலர் வன்னிக்கு இடம் பெயர்ந்தார்கள். இதனால் வன்னி மண் செழிப்புற்றது.

1974 இற்குப் பின்னர் ஏற்பட்ட புலப்பெயர்வு சற்று வித்தியாசமானது. 1977 இல் நாட்டில் இனப்பிரச்சினை தலை தூக்கியகாலத்தில் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் தாய் நாட்டை விட்டு வெளியேறினார்கள். 1983 ஜூலை இனக்கலவரம் மேலும் நாட்டில் இஸ்திர மற்ற சூழ்நிலையை உருவாக்கியது. இதன் பின்னர் லட்சக்கணக்கான மக்கள் வெளிநாடுகளில் நிரந்தரமாகக் குடியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இவ்வாறு சென்ற மக்கள் இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் பெருமளவில் தஞ்சமடைந்தனர்.

### புகலிடம்

எமது நாட்டிலிருந்து ஆரம்ப காலங்களில் இங்கிலாந்தில் அரசியல் தஞ்சம் கோரிப் புகலிடம் கேட்டவர்கள் ஆங்கில அறிவின்மை, உறவினர்களைப் பிரிந்த ஏக்கம் காரணமாக மிகுந்த சிரமப் பட்டனர் ஆனால் இன்று அந்நிலை இல்லை வழக்கறிஞர்களும் உறவினர்களும் அவர்

### கல்வி

இங்கிலாந்து பல்கலைக்கழகங்களில் இணைந்து கற்கும் வசதிகள் மற்றும் புலமைப் பரிசில் திட்டங்கள் இருந்தும் நம்மவர்கள் அவற்றினை 30 சதவீதமே பயன்படுத்துகின்ற துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. காரணம் அவர்களைக் கல்வியில் ஆர்வம் செலுத்துவதற்கு ஊக்குவிப்பதற்கு பெற்றோர் உறவினர் இல்லாமையே ஆகும்.

கனடாவில் தமிழ்மொழிக்கு உரிய அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழக கல்வி வரை தொடர்வதற்கு பல்கலைக்கழக கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளது. இவற்றில் தமிழும், ஆங்கிலமும் தெரிந்த ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள். இங்கு கட்டணங்கள் செலுத்தி கற்கவேண்டியுள்ளதால் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக இளைஞர்கள் ஆர்வங்காட்டுவதாக தெரியவில்லை.

### தமிழின் சிறப்பு

இக் கல்லூரிகளில் தமிழ்ச் சங்கம்அமைத்து தமிழ்விழாக்களை நடாத்தி தமிழ் மொழியை வளர்க்கிறார்கள். இவ் விழாக்களில் இன, மத, மொழி பேதமின்றி அனைவரும் கலந்து கொள்கிறார்கள். இவ் விழாக்களில் முக்கிய நிகழ்வுகள் மூன்று நான்கு மொழிகள் மூலம் நிகழ்த்தப்படுவதால் தமிழர் வாழ்வின் அவலங்களும், தமிழ் மொழியின் சிறப்பும் எம் இனம் பற்றிய அறிவும் சர்வதேசமெங்கும் ஒலிக்க வாய்ப்பேற்பட்டுள்ளது.

### 500 தமிழ்க் கடைகள்

இங்கிலாந்து பிரதான வீதிகளில் சுமார் 500 தமிழ்க் கடைகள் உண்டு. அங்கு நடராஜர் விக்கிரகம் முதல்

தலைப்பிலான பேச்சுப் போட்டியில் இதை அவதானிக்க முடிந்தது. 'நமச்சிவாய வால்க நாதன் தாழ் வால்க' என்று படுபிழையாக உச்சரிக்கிறார்கள்.

தமிழ்ப் பெயர்கள் அருகி வருவதால் தமிழ்ச் சங்கங்கள் தமிழ்ப் பெயர்கள் உள்ள அகராதிகளை அச்சிட்டு இலவசமாக கோயில்களில் வழங்குகிறார்கள். தமிழன் வழிகாட்டி, தமிழர் தகவல் ஏடு போன்றன வழி காட்டி நூல்களாக உள்ளன. இவற்றில் கடைகளின் பெயர்கள், கலைஞர்களின் தொலைபேசிஇலக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் புதிதாக அங்கு செல்பவர்கள் ஆறுதலடைகின்றனர்.

### திருமண விழாக்கள்

திருமணத்திற்கு இங்கிருந்தே (இலங்கை) மணமக்கள் ஏற்றுமதியாகிறார்கள். இங்கிலாந்தில் பிரமாண்டமான சைவக் கோவில்களில் திருமணமண்டபங்கள் உண்டு அங்கு தினமும் யாழ்ப்பாணத்தவரின் திருமணவைபவங்கள் நடைபெறும். திருமணங்களின் பின் நடைபெறும் வரவேற்பு உபசாரங்கள் தான் கவலை அளிப்பனவாகவுள்ளன. பன்னீர் தெளித்து வரவேற்ற சமூகம் 'போத்தல்' காட்டி வரவேற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இளம் மட்டங்கள் தமது பிறந்த தினங்களை மிகவும் டாம்பீகமான முறையில் கொண்டாடி வருகின்றனர்.

இதே நேரம் சமுதாய உணர்வோடும்; சமூகப்பற்றோடும் தமது வாழ்வை ஒரு முறை பின்னோக்கிப் பார்த்து சமுதாய உணர்வோடு சேவையாற்றும் இளைஞர்களையும் காணலாம் இவர்கள் கோயில் விழாக்கள், சமூக விழாக்கள்

### மதம்

இங்கிலாந்தில் 11 சைவக் கோயில்கள் உண்டு. இன்றைய தலைமுறை சமயப்பற்றற்ற நிலையில் உள்ளது அங்கு பிறந்து வளர்ந்தவர்கள் ஆன்மீகச் சிந்தனை குறைந்தவர்களாக இருக்கின்றனர். இங்கிலாந்தில் ஈழபதீஸ்வரர் சிவன் கோயில், முத்துமாரி அம்மன் கோயில் என்பவற்றில் பிரமாண்டமான உண்டியல்கள் உண்டு; இவற்றில் சேரும் பணம் தர்ம நோக்கில் செலவிடப்படுகிறது. இங்கு தேர்த் திருவிழா; மற்றும் கலாசார நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் 9 இந்து ஆலயங்கள் கிறிஸ்தவ தேவாலயங்களில் இருக்கின்றன, தேவாலயங்களின் கட்டட அமைப்பை மாற்றக்கூடாது என்ற உறுதியுடன் அவற்றை ஏலத்தில் விற்கிறார்கள் விக்கிரகம் வாகனங்கள் இந்த தெய்வங்களினுடைய வையாக இருக்கும்.

### குடும்பப் பிரச்சினைகள்

தற்போது கனடாவில் குடும்பப்பிரச்சினைகள் தலை தூக்கியுள்ளன. இதனால் நீதிமன்றங்களில் தமிழ் நன்றாக உச்சரிக்கப்படுகின்றது: கனடாவில் இருந்து 11

தொகுப்பு:-
**எம். எஸ். எஸ். கீர்த்தி**
**(அரியாலை நிருபர்)**

தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவருகின்றன: இவற்றில் வழக்கறிஞர்களின் விளம்பரங்கள் ஒரு பக்கத்தை நிரப்பி இருக்கும். குடும்பப் பிரச்சினையா? விவாகரத்து வேண்டுமா? தாபரிப்பு பணம் வேண்டுமா? இவ்வாறான விளம்பரங்கள் பெருகிவிட்டன.

கனடாவில் உள்ளூர் தொலைபேசி அழைப்புகள் இலவசமான காரணத்தால் தொலைபேசி உரையாடல்களால் கணவன் - மனைவி இடையில் சந்தேகங்களும் அபிப்பிராய பேதங்களும் உண்டாகின்றன. ஆனால் தற்போது கதைப்பவரையும் தொடர்பு கொண்டவரின் இலக்கத்தையும் பதிந்து வைக்கும் தொழினுட்பம் அறிமுகமாகியுள்ளது.

போல பிரச்சினை இருந்தால் என்ற பழையநிலைக்குப் போவதும் கடந்து வந்த பாதையை சற்றேனும் சிந்திக்காமல் இருப்பதும் இன்னும் ஒரு ஐம்பது வருடத்தை நகர்த்தும் எண்ணம் போலும்.

இனிமேல் காலம் நகராது காலனும் நகரமாட்டான். கனிந்திடும் புது யுகத்தைப்பார்த்து கைகேயியின் கொடுமை கண்டு நெஞ்சிலே எற்றி எற்றி அடித்த சோவற் கூட்டம் போல் சின்னா பின்னப் படுவதற்கு ஒரு கூட்டம் தயாராகிறது போலும். குட்டக் குட்டக் குனிபவனும் மடையன் குனியக் குனியக் குட்டுபவனும் மடையன் என்பதை மறக்கக்கூடாது தான்.

யாரிருந்தென்ன- புயவலிமை தானிருந்தென்ன தர்மத்தின் முன்னிலையில் இவை அனைத்தும் பரிதிமுன்பனி என்பதைப் பக்குவப்பட்ட உள்ளங்கள் உணர்ந்தே ஆக வேண்டும்.

அன்புடன் ஆசிரியர்

பட்டனர் ஆனால் இன்று அந்நிலை இல்லை வழக்கறிஞர்களும் உறவினர்களும் அவர்களை மீட்டெடுக்கிறார்கள். அறுபது எழுபதுகளில் லண்டன் தமிழ்ச் சங்கம் போன்ற நிறுவனங்கள்வக்கீல்கள்மூலம் இலவசமாக வழக்குப்பேசி வென்று எம்மவரை மீட்ட வரலாறுகளும் உண்டு. கண்டும் காணாதவர்கள் போல் விலகுபவர்களும் இருக்கிறார்கள். நாட்டில் நிலவிய அரசியல் பிரச்சினை காரணமாக சுமார் 14 வருடங்களுக்குமுன் சென்றவர்கள் இன்று மற்றவர்களை வழி நடத்துகிறார்கள்; அந்த நாட்டுப் பிரஜைகள் போல் செயற்படுகிறார்கள்.

## தொடர்பூடகம்

ஊடகங்களுக்கு இளைய தலை முறையினர் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கனடாவில் 6 வானொலி சேவைகள் 24 மணி நேரமும் இயங்குகின்றன இந் நிகழ்ச்சிகள் இலங்கை, இந்திய வானொலிகளை விட சிறப்பாக அமைகின்றன. பிரான்ஸ் தலை நகர் பாரிஸிலிருந்து 24 மணி நேரமும் ஒலி, ஒளிபரப்பாகும். வானொலி, தொலைக்காட்சி சேவை நிகழ்ச்சிகளை ஜேர்மனி, பிரான்ஸ், ஒல்லண்ட், கனடா போன்ற நாடுகளில் வதியும் நம்மவர்கள் அதிகமாக கேட்கிறார்கள்.

களில் சுமார் 500 தமிழ்க் கடைகள் உண்டு. அங்கு நடராஜர் விக்கிரகம் முதல் ஊசி வரை சகல பொருட்களும் கொள்வனவு செய்ய முடியும் 'தாவடி புகையிலை' 'கீரிமலைக் கள்ளு' என யாழில் புகழ் பெற்ற பொருட்களின் பெயரில் விளம்பரப் பலகைகளை காணலாம்.

நம்மவர்கள் சிலர் அங்கு பொருளாதாரத்தின் உச்சிக்குச் சென்று விட்டார்கள்; பாரம்பரிய அரச இல்லங்கள்.

முதியோர் இல்லங்களை பிற நாட்டாருடன் போட்டி போட்டு வாங்குமளவிற்கு பொருளாதார வளர்ச்சியின் உச்சியில் உள்ளனர். இதே வேளை தமது வாழ்க்கையை ஒரு ஸ்திர நிலைக்குக் கொண்டுவர முடியாமல் திணறுவோரும் உளர். பெரும்பாலான இளைஞர்கள் இரவு பகலாக பேக்கரிகளில் தொழில் செய்கிறார்கள்; இளம் பெண்களும் விவாகமான பெண்களும் புகைப்படம் கழுவும் தொழிலகங்களில் பணிபுரிகின்றார்கள்;

## தமிழ் ஏற்றம் பெறுமா

எமது அடுத்த சந்ததி தமிழ் பேசுமா? என்ற ஏக்கமே விஞ்சிநின்றது. பேச்சுப்போட்டிகள் நடாத்துகின்றார்கள். ஆனால் பங்கு பெறும் சிறார்கள் ஆங்கிலத்தில் எழுதியே வாசிக்கிறார்கள்; 'நாவலரும் தமிழ்த் தொண்டும்' என்ற

காணலாம் இவர்கள் கோயில் விழாக்கள், சமூக விழாக்கள் போன்றவற்றில் உண்டியல் மூலம் பணம் சேகரித்து எமது நாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வுக்காக உதவி வருகிறார்கள்;

கும் தொழினுட்பம் அறிவுக மாகியுள்ளது.

இப்போது உளத்தாக்கங்களால் தற்கொலைகள் அதிகம் இடம் பெறுகின்றன; வன்முறைகள் தலைதூக்கியுள்ளன விவாகரத்துக்கள்

(2ஆம் பக்கம் பார்க்க)

# சாயி அருளமுதம்



## வீண் செலவு

செல்வந்தன் வீட்டை எடுத்துக் கொண்டால், படுக்கை அறையில் "ஏர் கண்டிஷன்'' வைத்துக் கொள்ளலாம் அல்லது வரவேற்பறையில் வைத்துக் கொள்ளலாம்; குளியல் அறையில் கூடவா ஏர்கண்டிஷன் வைத்துக் கொள்ள வேண்டும்; இத்தகைய துராசைகெட்ட ஆசை எதற்கு? ஏன் பணத்தை வீண் செலவு செய்கிறாய்? அது மட்டுமல்ல மனிதத்தன்மையையே கேவலப் படுத்துகிறாய். தேவையான அளவு சம்பாதித்தால் போதுமானது; அதிகம் பணம் சம்பாதிப்பதால், உனக்குமூளைகலங்கி விடுகிறது. இவ்வாறு மூளை கலங்கினால், உடல் நிலை சீர் கேடடையும்; அமைதி இருப்பதில்லை. மன நிறைவு சிறிதும் இல்லை. இன்னும் வேண்டும் என்கிறாய். ஆசைக்கு ஓர் அளவே இல்லை; Less Luggage more comfort makes travelling a pleasure குறைந்த சுமையில் அதிக சுகம்; பயணமும் இனிமையாக இருக்கும்.

பாபா

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
[illegible]

# மதுவரி வாகனத்தின் மீது

# துப்பாக்கிப் பிரயோகம் ஒருவர் பலி

(வவுனியா)

வவுனியாபூந்தோட்டத்தில் சட்ட விரோதமான கசிப்பு விற்பனை செய்தவர்களைக் கைது செய்து கொண்டு வவுனியா திரும்பிக் கொண்டிருந்த மதுவரி இலாகாவினரின் வாகனம் மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பலியானார். மதுவரி இலாகாவைச் சேர்ந்த இருவர் காயம் அடைந்த நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மதுவரி இலாகா இன்ஸ்பெக்டர் நந்தகுமார், மதுவரி இலாகா பாதுகாப்பு அதிகாரி றமேஸ்குமார் ஆகியோரும், கைது செய்யப்பட்டு வாகனத்தில் கொண்டுவரப் பட்டவர்களும் காயத்துக்குள்ளாகிஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் பற்றி வவுனியா மதுவரி இலாகா அத்தியட்சகர் எஸ்.இராஜசிங்கம் விபரிக்கையில்:

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் கசிப்பு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்ட தகவலை அடுத்து அங்கு சென்று விற்பனையில் ஈடுபட்டிருந்த 5பேரைக் கைது செய்து வாகனத்தில் ஏற்றி வந்த சமயம் பூந்தோட்டம் கல்வியியற் கல்லூரி வீதியில் வைத்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவித்தார்.

இச் சம்பவத்தில் கொல்லப் பட்டவர் விக்டர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (வ)

---

## மாவை...

டணி வேட்பாளர்கள் என நாம் வெளியிட்ட பெயருக்குரியவர்கள் இதுவரை தங்களது தனிப்பட்ட மறுப்பெதனையும் 'வலம்புரி' க்குத் தெரிவிக்கவில்லை என்பதை முதலில் குறிப்பிட்டாக வேண்டும்,

அதேவேளை வேட்பாளர் பட்டியலை கூட்டணியின் வட்டாரங்களிலிருந்தே பெற்றுக் கொண்டோம் என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றோம்.

யாழ். மாவட்டத்தில் போர்ச் சூழல் உக்கிரமடைந்து வரும் நிலையில் இத்தகைய செய்திகளை வெளியிடுவது விபரீதமானது என மாவை குறிப்பிட்டுள்ளார் அப்படியானால் யாழ். மாவட்டத்தில் போர்ச் சூழல் இப்போதுதான் உக்கிரமடைந்ததா? 'வலம்புரி' யாழ்ப்பாணத்து மண்ணிலிருந்தே வெளியிடப்படுகிறது என்பதைக் கூட்டணிக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது ஒரே ஒரு பத்திரிகையும் தடை செய்யப்பட்டுவிட்டது என பொய் அறிக்கை விட்டு 'வலம்புரி'யின் வரவை இருட்டடிப்புச் செய்த கூட்டணியினரின் மறுப்பு எந்தளவு தூரம் உண்மையானது என்பதை வேட்பு மனுத்தாக்கல் செய்யும் கடைசி திகதி வரை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இதேவேளை 'வலம்புரி' துல்லியமாக எடுத்து பிரசுரிக்கும் செய்தி தமக்குக்கிடைக்கவில்லை என்பதற்காக அச் செய்திகளை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பிரசுரமொன்று மறுத்து வருகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன் ஆரம்ப ஆசிரியர் நியமனத்தில் பாதிக்கப்பட்டவர்களை பயமுறுத்தியது போல், யாழ்ப்பாணத்தில் 'புளொக்' செய்ய வல்லவர்களின் வீடுகளுக்குச் சென்று 'காட்டிக் கொடுப்பேன்' என்று அச்சுறுத்தியதுபோல் 'வலம்புரி'யை

---

## இதுதான்...

தால் இலங்கையில் வருங் காலத்தில் ஜனநாயகம் இப்படித்தான் இருக்கும் போல தோன்றுகிறது என்று சபாநாயகர் கே.பி. ரட்னாயக்கா நேற்று கவலை வெளியிட்டுள்ளார்.

சபாநாயகர் கே.பி.ரட்னாயக்கா மேலும் தெரிவிக்கையில் அண்மைக்கால பாராளுமன்ற அமர்வுகளில் எம்.பிக்களின் நடத்தை ஜனநாயகத்திற்கு கேள்விக்குறியாகவுள்ளது ஜனநாயகம் இவ்வாறுதான் எதிர்காலத்தில் பேணப்படும் என்று தெரிவித்துள்ளார். (வ)

---

## வலம்புரி...

சேனாதிராஜா அவசர பக்ஸ் செய்திஒன்றை 'வலம்புரி' க்கு அனுப்பிவைத்துள்ளார்.

அச்செய்தியில் பாராளுமன்றம் கலையாத நிலையில் எப்போது தேர்தல் என்பது திட்டவட்டமாகத் தெரியாத நிலையில் யாழ். மாவட்டத்தில் போர்ச் சூழல் உக்கிரமடைந்து வரும் நிலையில் அவசர அவசரமாக இவ்வாறு செய்திகளை கொடுத்து விபரீதங்களை உருவாக்க சிலசக்திகள் ஆசைப்படுவதாகவும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட விருப்பமே தெரிவிக்காதவர்களின் பெயர் விபரங்களை பத்திரிகைக்கு கொடுத்தவர்களின்

---

## இன்று கூட்டம் நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

புதிய உயர்கலைக் கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த ஆரம்ப நெறி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோருக்கான கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறாதென மேற்படி பாதிக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவர் பா.மணிவண்ணன் அறிவித்துள்ளார். (ந)

---

## அரசுக்கு...

வகிக்கும் கட்சிகள் பங்கு கொள்ளவுள்ளதாக மாகாண சபைகள் உள்ளூராட்சிஅமைச்சர் அலவிமௌலானா தெரிவித்துள்ளார்.

லிப்டன் சுற்றுவட்டாரத்தில் தரித்து பிற்பகல் 3மணிக்கு நடைபெறவுள்ள இவ் ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

---

## விமானத்...

தாக்குதலை நடத்தியதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரே தடவையில் எட்டு குண்டுகள் வீசப்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் யாழ். நகரபகுதியிலும் கூட விமானங்களின் இரைச்சலை கேட்கக்கூடியதாக இருந்ததாக மக்கள் தெரிவித்துள்ளனர். [ச]

---

## நாட்டின்...

ஜி.எல், பீரிஸ்

இனப்பிரச்சினைக்குப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணவேண்டும். அதற்கேற்ற வகையில் அரசியல் சூழ்நிலையும் மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதற்குரிய முயற்சிகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். இதேவேளை இனப்

---

# இடம்பெயர்ந்த யூனியன் கல்லூரி

## பல வழிகளாலும் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இடம் பெயர்ந்து கடந்த 10 வருடங்களாக அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் மாணவர்கள் தம் கல்வியை மேற்கொண்டுவருவதாகப் பெற்றோர் பலரும் தம் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

மாணவர்களின் கல்விக்குத் தேவையானவிஞ்ஞான ஆய்வுகூடவசதிகளற்றநிலையிலும், மலசல கூட வசதியின்மை, குடி தண்ணீர் வசதியின்மை, கட்டட வசதியின்மை, நூலக வசதியின்மை போன்ற வசதியீனங்களால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

க.பொ.த. உயர் தர விஞ்ஞான பிரிவைக் கொண்ட 1 ஏ.பீ பாடசாலை ஆகிய இக் கல்லூரிக்கு இது வரை கணனி இயந்திரங்கள் கூட வழங்கப்படவில்லை.

கல்லூரியின பல்வேறுபட்ட குறைபாடுகள் தொடர்பாக கல்வித்திணைக்கள அதிகாரிகளுடன்தொடர்பு கொண்ட போது இடம் பெயர்ந்த கல்லூரி என வாய்ப்புக்களையும், வசதிகளையும் புறந்தள்ளி வருவதாகவும், இதனால் மாணவர்களின் கல்வியில் உள ரீதியான பல பாதிப்புகளை ஏற்படுத்துவதாகவும் பெற்றோர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (வ-7)

---

## தற்கொலைக்......

இத்தற்கொலைக் குண்டுத் தாக்குதல் பற்றித் தெரிய வருவதாவது,

வவுனியா மக்களுக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் வைத்து நிரந்தர வதிவிட அனுமதிப்பத்திரங்களை வழங்கி விட்டு இராணுவ புலனாய்வு அதிகாரிகள் தமது முகாமிற்குத் திரும்பிய போது இத்தாக்குதல் நடைபெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்கொலைக் குண்டுதாரி புலனாய்வு அதிகாரியின் வாகனம் வந்த போது அதன் முன்பாய்ந்ததாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இக்குண்டுத் தாக்குதலில் தவசிக்குளத்தைச் சேர்ந்த 9வயது சிறுமியான புஸ்பலதா கொல்லப்பட்டார் காயமடைந்த நிமால், பண்டார ஆகிய இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வவுனியா நகரத்தை அதிர வைத்த இத்தற்கொலைக் குண்டுத் தாக்குதல் வவுனியாவில் இடம்பெற்ற முதலாவது தற்கொலைக் குண்டுத் தாக்குதலாகும். [வ]

---

# பட்டதாரிகளுக்கு நியமனம்வழங்கப்படும்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் முதற் கட்டமாக 137 பேருககு ஆசிரியர் நியமனம் வழங் வதற்காக வடக்குக் கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சு விரைவில் நேர்முகப் பரீட்சை நடத்தவுள்ளது

# கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

யாழ்.மாவட்ட கல்வி சம்பந்தமான தற்போதைய நிலையினை மேம்பாடு செய்வதற்கான கலந்துரையாடல் இன்று காலை 10.00மணிக்கு ஈ.பி.டி.பி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் மற்றும் பிரதம செயலாளர், பதில் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கஜன்
திரை
ஊர்காவற்றுறை
லிவிங்ஸ்டன்
கௌசல்யா நடித்த
சொல்லாமலே
காட்சி நேரம்

ஸ்ரீ செல்வா
[யாழ்ப்பாணம்]
பிரசாந் இம்ரான்
நடித்த
பார்த்தேன்
ரசித்தேன்
CD பிரதி (புதியவெளியீடு)
காட்சி நேரம்

...செய்ய வல்லவர்களின் வீடுகளுக்குச் சென்று 'காட்டிக் கொடுப்பேன்' என்று அச்சுறுத்தியதுபோல் 'வலம்புரி'யையும் சிலர் கருதினால் அதற்குத் தக்க பதிலடி கொடுக்க நாம் தயார் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறோம். (மு)

...தெரிவிக்காதவர்களின் பெயர் விபரங்களை பத்திரிகைக்கு கொடுத்தவர்களின் பொறுப்பற்ற தன்மையை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

...சிகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். இதேவேளை இனப் பிரச்சினைத் தீர்வினை அங்கீகரிக்க வேண்டும் என்றும் பேராசிரியர் பீரிஸ் கேட்டுக் கொண்டார். (ல)


சொல்லாமலே

காட்சி நேரம்

பி.ப 8.30 மணி

(இ/652)

ரசித்தேன்

CD பிரதி (புதியவெளியீடு)

காட்சி நேரம்

10-30, 2-00 (ப.பே)

[இ 688]

2-ம் ஆண்டில் காலடி பதிக்கும் எமக்கு கடந்த வருடத்தில் ஒத்துழைப்பு நல்கி பேராதரவு தந்த எங்கள் தொலைபேசிப் பாவனையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

FREE

நாளை மட்டும் (18 - 08 - 2000)

FREE

★ உள்வரும் அழைப்புகள் முற்றிலும் இலவசம் ★

GSB COMMUNICATION CENTRE

தொலைத் தொடர்பு நிலையம்

444/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(பாப்பையா கடைச் சந்தி)

தொலைபேசி

021 - 3220

021 - 3430

தொலை நகல்

(Fax)

021-3430

உள்நாட்டு வெளிநாட்டு நேரடித் தொலைபேசி, தொலைநகல் (Fax) சேவைகள்

(இ-718)



இப்பத்திரிகை "வலம்புரி" [illegible] இல. 15, [illegible] யாழ்ப்பாணம் [illegible] 2000 [illegible] 17 [illegible]